பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 19 வெள்ளிக்கிழமை (02-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:157





யாழ்நகரில் நேற்று நடந்த தேசிய மேதினப் பேரணிக்கு சமயத்தலைவர்களும், அரசியல் கட்சி மற்றும் பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகளும் தலைமை வகித்துச் சென்ற காட்சி. *(படங்கள்: தேவா)*

# யாழ்.கோட்டையில் படைத்தளத்துக்கு புலிகள் ஆட்சேபம்

## பாதுகாப்புச் செயலருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

கிளிநொச்சி,மே2

**யாழ்நகரின் மத்தியில் சுபாஸ் ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் மற்றும் அவற்றின் சுற்றாடலில் உள்ள 512 ஆவது பிரிகேட் படைத்தளத்தை யாழ்.கோட்டைப் பகுதிக்கு இடம்மாற்றும் அரசின் யோசனையைப் புலிகள் ஆட்சேபித்து அடியோடு நிராகரித்துவிட்டனர்.**

இந்த யோசனை ஏற்கமுடியாதது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேரடியாக கடிதம் மூலம் அறிவித்தார்.

மக்கள் நெருக்கமாக வாழாத வேறு பிரதேசத்துக்கு இந்தப் படைத் தளத்தை இடம்மாற்ற நடவடிக்கை எடுக்கும்படியும் தமிழ்ச்செல்வன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைக் கோரியிருக்கின்றார்.

சம்பந்தப்பட்ட படைத்தளத்தை யாழ்.கோட்டைப் பிரதேசத்துக்கு மாற்றும் தங்கள் திட்டம் குறித்து பாதுகாப்புச் செயலர் கடந்த ஞாயிறன்று கடிதம் மூலம் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு அறிவித்திருந்தார்.

அந்தக் கடிதத்துக்குப் பதில் கடிதத்தையே தமிழ்ச்செல்வன் நேற்றுக் கிளிநொச்சியில் உள்ள தமது இயக்கத்தின் அரசியல்துறை தலைமையகத்திலிருந்து அனுப்பி வைத்தார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்நகரிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான அரசின் முன்னைய யோசனைக்கும் புதிய யோசனைக்குமிடையே எந்த ஓர் அர்த்தமுள்ள வித்தியாசத்தையும் நாம் காணவில்லை என்பதை நாம் கவலையுடன் தெரிவிக்கின்றோம். உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட இடம் யாழ்ப்பாணம்-பண்ணை வீதிக்கும், யாழ்.தபால் நிலையத்துக்கும், யாழ்.ப.நோ.கூ.சங்கத்துக்கும் ஸ்ரீலங்கா ரெலிக்கோம்முக்கும், வீரசிங்கம் மண்டபத்


(12 ஆம் பக்கம் பார்க்க)

# நூற்றுக் கணக்கான ஊர்திகளுடன் ஆயிரக்கணக்கான மக்கள் பேரணி!

## நேற்றைய கூட்டு மேதின விழாவில் ஒன்றுதிரண்டு உரிமைக்கோஷம்



நேற்றைய மேதினப் பேரணியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் உருவப் படங்கள் பல எடுத்துச்செல்லப் பட்டன. அவற்றில் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.



மேதினத்தைக் குறிக்கும் அலங்கார ஊர்திகளில் ஒன்று.
*(மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)*

யாழ்ப்பாணம்,மே2

நல்லூரில் இருந்து நூற்றுக்கணக்கான கண்கவர் அலங்கார ஊர்திகளின் பவனியுடன் மேதினம் நேற்று எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. ஊர்திப் பேரணியிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுக்கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

பொது அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் இணைந்து ஏற்பாடு செய்த கூட்டு மேதின நிகழ்வுகள் மாலை 5 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கிராம உத்தியோகத்தர் சங்க முன்னாள் தலைவர் க.சிவராசா தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றன.

முதலில் பொதுச்சுடரேற்றல் இடம்பெற்றது. பொதுச்சுடரினை பிரம்மஸ்ரீ மகாகணபதிக் குருக்கள், அதிவண ஜேநிக்கிலஸ், மௌலவி எம்.எம்.நாகிப், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாவீரர்களான சிவகுமார், தேவகுமார் ஆகியோரின் தாயார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உலக இந்து மாநாட்டுக்கு ஜனாதிபதி இன்று வருவாரா?

கொழும்பு,மே2

பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் கொழும்பில் இன்று ஆரம்பமாகும் உலக இந்து மாநாட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறார். எனினும் அவர் அந்த மாநாட்டில் கலந்துகொள்வது சந்தேகமே என்று கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

பாதுகாப்பு காரணங்களுக்காக ஜனாதிபதி இந்துமாநாட்டுக்கு வருகை தரமாட்டார் என்று ஜனாதிபதிமாளிகை வட்டாரங்களில் தகவல் அடிபடுகிறது.

வடக்கு - கிழக்கு உட்பட பல பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் மாநாட்டில் கலந்துகொள்ள வருகைதந்திருப்பதால் மாநாட்டில் கலந்துகொள்வது உசிதமானது அல்ல என்று ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் அவருக்கு ஆலோசனை கூறியிருப்பதாக தெரியவருகிறது.

மாநாட்டில் கலந்துகொள்வோரின விவரங்களை ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் இந்து விவகார அமைச்சிடம் ஏற்கனவே கேட்டிருந்தனர் என்றும் -

ஆனால், பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் வருகைதரக்கூடும் என்பதால் மாநாட்டில் கலந்துகொள்வோரின் முழு விவரங்களையும் முன்கூட்டியே தர முடியாது என்று இந்து விவகார அமைச்சு தெரிவித்திருந்ததாகவும் அறியவந்தது. (ஐ)

# 2ஆவது உலக இந்து மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பம்!

கொழும்பு,மே2

இரண்டாவது உலக இந்து மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது.

உலக இந்து மாநாடு என்றால் அது இலங்கையில்தான் என்றாகிவிட்டது. முதலாவது உலக இந்து மாநாடு இலங்கையில்தான் நடந்தது. இரண்டு தசாப்தங்களின் பின்னர் இரண்டாவது உலக இந்து மாநாடும் இலங்கையிலேதான் நடைபெறுகின்றது.

இந்து சமய அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் வழிகாட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட 2 ஆவது உலக இந்து மாநாடு இன்று காலை 9மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.


ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும்,பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(12 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பில் இன்று ஆரம்பமாகும் உலக இந்து மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் நேபாள உலக இந்து ஒன்றியத் தலைவர் மேஜர் ஜெனரல் பாரத் சேகர் சிம்கா, ஆலோசகர் மோகன் கோபால், செயலாளர் பிறேம்லஸ் கெரி ஆகியோர் இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம். (ஐ)

# மேதினக் கொண்டாட்டக் காட்சிகள்











# சுயநிர்ணய அடிப்படையில் தன்னாட்சி நிரந்தர சமாதானத்துக்கு இதுவே வழி!

## யாழ். கூட்டு மேதின விழாவில் பிரகடனம்

யாழ்ப்பாணம்,மே2

சிங்கள தேசத்தின் பேரினவாத ஆட்சிகளின் ஆக்கிரமிப்பில் அழுந்திக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தன்னாட்சி பேணப் படும்போதுதான் நிரந்தர சமாதானம் உருவாகும் என்ற எமது அரசியல் அபிலாஷை பிரகடனத்தை சிறிலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இன்றைய மேநாள் எழுச்சிப் பேரணியூடாக வெளியிடுகின்றோம்.

யாழ்நகரில் நேற்று வியாழக்கிழமை நடந்த தமிழ்த் தேசிய கூட்டு மேதின விழாவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

கூட்டு மேதினத்தில் இணைந்து கொண்ட அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள், பொதுஅமைப்புக்கள் ஆகியன இணைந்து இந்தப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ்.பிரதீபன் பிரகடனத்தை வாசித்து முன்மொழிய மக்கள் சுரகோஷம் செய்து அங்கீகரித்தனர்.

அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசிய மக்களால் ஒருங்கிணைக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் அனைத்துத் தொழிலாளர் நாளாகிய இன்று இலங்கைத் தீவில் சிங்கள தேசத்தின் பேரினவாத ஆட்சிகளின் ஆக்கிரமிப்பில் அழுந்திக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தன்னாட்சி பேணப்படும்போதுதான் நிரந்தர சமாதானம் உருவாகும் என்ற எமது அரசியல் அபிலாஷையை சிறிலங்கா அரசுக்கும் சர்வதேசத்திற்கும் இம்மேநாள் எழுச்சிப் பேரணியூடாக வெளியிடுகின்றோம்.

### பிரகடனம்

01. பேரினவாத ஒடுக்குமுறைக்கெதிராக, தமிழ்த் தேசிய இனத்தின் ஒருங்கிணைந்த செயலாற்றல் மிக்க ஓங்குகரங்களாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளையும், அதன் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களையும் எமது ஒரே தேசியத் தலைமையாகக் கொண்டிருப்பதில் நாம் உறுதி பூண்டுள்ளோம்.

02. தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்த் தேசிய இனத்தின் ஏகப் பிரதிநிதிகள் என்றும், நிரந்தர சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே சிறிலங்கா அரசு பேசவேண்டுமென்றும் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ மக்கள் கொடுத்த ஆணையை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

03. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து மேற்கொள்ளப்படும் எந்தப் பேச்சுவார்த்தை அரங்கும், - எக்காரணம் கூறப்பட்டாலும் - தமிழ்த் தேசிய இனத்தைப் பேச்சுவார்த்தைக் களத்திலிருந்து புறந்தள்ளும் உள்நோக்கம் கொண்டவையாகவே அமையும்.

04. 22.02.2002இல் சிறிலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிற் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்தத்திற்கானதும், தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கையை நிலைநிறுத்துவதற்குமான புரிந்துணர்வு உடன்படிக்கையை விரைவாகவும், முழுமையாகவும் நிறைவேற்றவேண்டும்.

05. தமிழர் தாயகத்தில் நிரந்தரமான சமாதானமும், இயல்பு வாழ்வும் ஏற்பட வேண்டுமானால் நில வன்பறிப்பு இராணுவம் முற்றுமுழுதாக மக்கள் வாழ்விடங்களிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

06. சிறிலங்கா ஆயுதப் படைகளின் நில வன்பறிப்புக் காரணமாக தமது சொந்த வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதி முகாம்களில் அவல வாழ்வு வாழும் தமிழ்மக்கள் தமது வாழ்விடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டு தொழில், உடல்நலம், கல்வி, வழிபாட்டு உரிமைகளை இராணுவ நெருக்குதல்கள் இன்றி அனுபவிப்பதற்கான சமூகப் பொருண்மியக் கட்டுமாணங்கள் உடனடியாக கட்டியெழுப்ப வழிசெய்யப்படவேண்டும்.

07. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறிலங்கா சிறைக்கூடங்களில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ்ச் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும். இது போன்ற கைதுகள் எதிர்காலத்தில் நிகழாதிருப்பதற்காக, கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமெனக் கோருகின்றோம்.

08. பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு பிராந்தியத்தின் முழுமையான புனர்நிர்மாணமும் அபிவிருத்தியும் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும். இது குறித்த சிறிலங்கா அரசின் அசமந்தப் போக்கு நீக்கப்பட்டு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு முழுமை பெறவேண்டும்.

09. பிரதேச வேறுபாடின்றி கல்வியில் சம வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு தமிழர் வாழும் பிரதேசங்களில் கல்வி முன்னேற்றத்திற்கான தடைகள் அகற்றப்படவேண்டும். கல்வி முன்னேற்றத்திற்கான வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்பதுடன் கிராமப்புற, பின் தங்கிய கல்விக்கூடங்களில் வளங்களை மேம்படுத்த முன்னுரிமை வழங்கவேண்டும். உயர் கல்வி மற்றும் கல்விக் கூடங்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் கல்வியின் பின்னடைவிற்கான காரணங்களும் கண்டறியப்பட்டு தீர்த்து வைக்கப்படவேண்டும். ஆசிரியர் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும் என்பதுடன் முன் பள்ளிகள் சீரமைக்கப்படுதலும், தேவைக்கேற்ப நிறுவப்பட வேண்டும் என்பதுடன் அறிவியல், தொழில்நுட்பம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்ப வளங்கள் தமிழ்த் தேசத்துக் கல்வி நிறுவனங்கள் அனைத்துக்கும் சமமாக வழங்கப் படுதலும்வேண்டும். பாடங்கள் தயாரித்தல், அச்சிடுதல், வழங்கல் உட்பட தமிழ்த் தேசக்கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் தமிழ்க் கல்விமான் திட்டக் குழுவிடம் விடப்படுதல்வேண்டும்.

10. தமது கடுமையான உழைப்பின் மூலம் தேசத்துக்கான செல்வ வளங்களை படைத்திட்ட தொழிலாளர்கள் சிறிலங்கா படைகளின் கொடுமிக்க செயற்பாடுகள் காரணமாக தமது தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இன்னலுற்றுத் தவிக்கும் இவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுவதுடன், வேலைவாய்ப்புகளும் வழங்கப் படவேண்டும். அத்துடன் புதிய வேலை வாய்ப்புகளுக்குமான ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும்.

11. மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில், புதிய இராணுவமுகாம்கள் அமைப்பது, ஏற்கனவே சீரழிவுக்குள்ளாக்கப்பட்ட மக்களது இயல்பு வாழ்நிலையை மேலும் பாதிப்படையச் செய்து விடும். எனவே, இச்செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். குறிப்பாக கோட்டையில் இராணுவ முகாம் அமைக்கப்படும் முயற்சி உடன நிறுத்தப்படவேண்டும்.

கடந்த காலத்தில் சமாதானத்துக்கான முன்னெடுப்புக்கள் யாவுமே சிறிலங்கா பேரினவாதத்தினால் தடைப்பட்டமையை வரலாற்றுப் பட்டறிவாக நாம் கண்டுள்ளோம். இதுவே தொடர்கதையாகிவிடுவதை இனிமேல் நாம் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றோம்.

இம்மேநாளில் எம்மால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள விடயங்களை மனச் சுத்தியுடன் சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்துவதன் மூலமே இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானமும் இயல்பு வாழ்வும் ஏற்படும் என்பதை ஒன்றிணைந்த குரலில் உரத்துக்கூறி நிற்கிறோம்.

- இவ்வாறு அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-8-9-10-4-5-30)

## துருக்கியில் பெரும் நிலநடுக்கம்

# பாடசாலை விடுதி நொறுங்கி 100 மாணவர்கள் உயிரிழப்பு!



இடிபாடுகளுக்கு இடையிலிருந்து இராணுவத்தினரும் மீட்புப் பணியாளர்களும் காயமடைந்த ஒருவரை காப்பாற்றி தூக்கிச் செல்வதை காணலாம்.

டமாஸ்கஸ்,மே2

துருக்கியின் தென்கிழக்குப் பகுதியை பெரும் நிலநடுக்கம் தாக்கியுள்ளது. இதனால் பல கட்டங்கள் நொறுங்கி வீழ்ந்துள்ளன. பெரும் எணணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 150 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 100 பேர் பாடசாலைச் சிறுவர்களாவர்.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 3.37 மணியளவில் திடீரென நிலநடுக்கம் தாக்கியது. பின்கோல் என்ற நகரைச் சுற்றிய பகுதிகளே பெரிதும் பாதிக்கப்பட்டன. சுமார் 15 செக்கன் நேரமே நீடித்த இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.4 புள்ளியாகப் பதிவானது.

இரவு நேரம் என்பதால், மக்கள் வீடுகளிலும் கட்டடங்களிலும் இருந்தனர். அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புக்களும் சேதங்களும் ஏற்பட்டுள்ளன. 150 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்; பலரைக் காணவில்லை. மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர்.

நிலநடுக்கத்தில் பாடசாலையின் நான்கு மாடிகளைக் கொண்ட மாணவர் விடுதி ஒன்றும் இடிந்து வீழ்ந்தது. இதனால், அதில் தங்கியிருந்த மாணவர்கள் 100 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களதும் காயமடைந்தவர்களதும் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



இடிந்து தரைமட்டமான பாடசாலை விடுதி.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இடிபாடுகள் அகற்றப்படும் போது அவற்றுக்குள் இருந்து மேலும் சடலங்கள் மீட்கப்படலாம் என்று மீட்புப் பணியாளர்கள் எதிர்பார்க்கின்றனர். மீட்புப் பணியில் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


100 மாணவர்களைப் பலி கொண்ட பாடசாலை நான்கு மாடி விடுதிக் கட்டடம் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகிக் கிடப்பதை தொலைக்காட்சி அலைவரிசைகள் ஒளிபரப்பின. உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோரது சோகம் மனதை உருக்குவதாக அமைந்திருக்கிறது என்று அங்குள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர்.'

அந்தப் பாடசாலை விடுதியில் 230 சிறுவர்கள் தங்கியிருந்துள்ளனர். ஆனால், சம்பவம் இடம்பெற்றபோது அங்கு எத்தனை பேர் தங்கியிருந்தனர் என்ற சரியான விவரம் தெரியவரவில்லை என்று பாடசாலை நிர்வாகம் கூறுகின்றது. இடிபாடுகளுக்குள் இருந்து ஏற்கனவே 50 முதல்60 வரையான சிறுவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நேற்று அதிகாலை முழுவதும் மக்கள் வீதிகளிலும் வெளிகளிலுமே தங்கியிருந்தனர்.

பிரதான வீதிகளை ஒட்டி இருந்த பல அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகங்களும் நிலநடுக்கத்தால் இடிந்து வீழ்ந்துள்ளதால் போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இது மீட்புப் பணிகளுக்குப் பெரும் இடைஞ்சலாக இருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

## ஈராக் போர் முடிந்துவிட்டதாக புஷ் பிரகடனம்



வாஷிங்ரன்,மே2

ஈராக் போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஈராக் போரில் பங்குபற்றிய யு.எஸ்.எஸ். வாஷிங்ரன் என்ற விமானந் தாங்கிக் கப்பலில் அமெரிக்கப் படையினருக்கு உரையாற்றிய போதே அவர் போர் முடிவு பற்றிப் பிரகடனப் படுத்தினார்.

அவரது உரை சிறிது நேரம் மட்டுமே நீடித்தது. இந்தப் போரில் அமெரிக்கா வெற்றிபெற்றதாக பிரகடனப்படுத்திய அவர் போர் முடிவுக்கு வருவதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக விமானந் தாங்கிக் கப்பலுக்கு எஸ்-3பி விமானத்தில் வந்திறங்கினார் புஷ். அந்த விமானத்தைச் செலுத்தியவர் ஒரு போர் விமான விமானி. அவர் போர் விமானங்களை தரைதொடும் தன் வழமை போன்று கப்பலின் விமான ஓடு தளத்தில் இந்த விமானத்தையும் சடுதியாக இறக்கி நிறுத்தினார்.

இது புஷ்ஷுக்கு அதிர்ச்சியுடன் கூடிய புதிய அனுபவமாக இருந்தது. "வியப்பூட்டும் தரையிறக்கம் சிக்கலின்றி இருந்தது" என்று பின்னர் அவர் செய்தியாளர்களிடம் சொல்லிச் சிரித்தார்.

விமானந் தாங்கி கப்பல்களுக்கு வரும்போது அதிபர் ஹெலிகொப்டரிலேயே வருவது வழமை. இதுவே முதற்றடவை அவர் விமானத்தில் வந்து கப்பலில் தரையிறங்கியது.

(ம)

## ஈராக்கில் உள்ள அமெ. படைக்கு எதிராகத் தீரமுடன் போராடுங்கள்

### ஈராக்கியர்களுக்கு சதாம் அழைப்பு

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிராக தீரமுடன் போராடுங்கள் என்று ஈராக்கிய மக்களுக்கு சதாம் ஹுசைன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அல்குத்ஸ் அல்-அராபி என்ற பத்திரிகை சதாமின் இந்த அறிக்கையைப் பிரசுரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெளியான தமது பத்திரிகையில் சதாமின் அறிக்கை பிரசுரிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகையின் ஆசிரியர் அப்துல் பாரி அத்வான் தெரிவித்தார்.

பக்ஸ் மூலம் இந்த அறிக்கை தமக்கு வந்ததாக அவர் கூறினார். ஆனால், அது எங்கிருந்து வந்தது என்று தமக்குத் தெரியாது என்றும் அவர் சொன்னார்.

அந்த அறிக்கையில், "ஈராக்கிய மக்களே அமெரிக்கப் படைகளை எதிர்த்து தீரமுடன் போராடுங்கள். நாட்டைவிட்டு அவர்களை விரட்டியடியுங்கள்.

"துரோகத்தினால் தான் நாம் அமெரிக்கப் படைகளிடம் தோல்வி அடைய நேர்ந்தது. உங்களிடையே உள்ள வேறுபாடுகளைத் தூக்கி எறியுங்கள். அமெரிக்கர்களிடமிருந்து நாட்டை மீட்க ஒற்றுமையாகச் செயற்படுங்கள்.

"அமெரிக்கர்களின் கைப்பாவைகளாக நியமிக்கப்படவுள்ள தலைவர்களால் உங்களுக்குச் சுதந்திரம் கிடைத்து விடாது" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் சதாம் ஹுசைன என்று அவர் கையெழுத்திட்டிருந்தார் என்று அப்துல் பாரி தெரிவித்தார்.

கடிதத்தின் முழு விபரத்தை அவர் வெளியிடவில்லை.

இந்தக் கடிதம் பத்திரிகை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு சில நாள்கள் முன்னர், அமெரிக்காவை விரட்ட விரும்பும் ஈராக்கிய எதிர்ப்பாளர்கள் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் இதே பத்திரிகைக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

## அமெரிக்கப் படையினர் மீது கிரனேட் தாக்கு; 7 பேர் காயம்!

### ஈராக்கின் புலூஜா நகரில் சம்பவம்

ஈராக்கின் மேற்குப்புற நகரான புலூஜாவில் உள்ள அமெரிக்கப் படையினரின் முகாம் ஒன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் 7 அமெரிக்கப் படையினர் காயமடைந்தனர் என அமெரிக்கப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே நகரில் சில தினங்களுக்கு முன்னர் அடுத்தடுத்து இரு தினங்கள் அமெரிக்கப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 15 அப்பாவி ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கர்களின் இந்த நடவடிக்கையால் ஆத்திரமடைந்தவர்களே இந்த கிரனேட் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கப் படையினர் கூறுகின்றனர்.

புதன்கிழமையன்று இரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத்தினர் கூறினர். அதனை நகர மேயரும் உறுதிப்படுத்தினார். அமெரிக்கப் படையினரின் முகாமுக்கு அருகே மேயரின் அலுவலகமும் இருக்கிறது. ஆனால், தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பதைப் பற்றி மேயர் எதுவும் கூறவில்லை.

இந்த கிரனேட் தாக்குதலில் காயமடைந்த அமெரிக்க வீரர்களில் எவருக்கும் ஆபத்தில்லை என்று கூறப்பட்டது. இந்தத் தாக்குதலின் பின்னர் அடையாளம் தெரியாத சிலருடன் அமெரிக்கப் படையினர் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ம)

## அல்கெய்டா சந்தேக நபர்கள் 6 பேர் பாகிஸ்தானில் கைது!

இஸ்லாமாபாத்,மே2

அமெரிக்காவால் தீவிரமாகத் தேடப்பட்டுவரும் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 6 பேரை பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கராச்சி நகரில் இருந்து இவர்கள் ஆறுபேரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தங்கியிருந்த இடங்களில் சோதனையிட்டதில் ஆயுதங்கள் பலவற்றையும் தாம் கைப்பற்றியதாக பாகிஸ்தான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அவர்களில் ஒருவர் அல் கெய்டா அமைப்பின் முதல் 10 தலைவர்களில் ஒருவர் என்று பாகிஸ்தானிய பொலீஸார் கூறுகின்றனர். இவரைப் பிடித்தது மிகப்பெரிய செயல் என்று அவர்கள் கருதுகின்றனர். அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் அல்கெய்டா சந்தேகநபர்களிலும் இவருக்கு முக்கியமான இடம உண்டு. காலித் என அறியப்பட்ட மொஹமட் பின் ஆஷ் என்ற அந்த நபர் 2000ஆம் ஆண்டு யேமனில் அமெரிக்க யுத்தக் கப்பலான யு.எஸ்.எஸ். கால் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி எனக் கூறப்பட்டது.



தாக்கப்பட்ட யு.எஸ்.எஸ்.கால்

பாகிஸ்தானில் கைது செய்யப்படும் அல்கெய்டா முக்கிய உறுப்பினர்களில் இரண்டாவது நபர் இவராவார். கடந்த மார்ச் மாதத்தில் பின்லேடனின் நெருங்கிய சகா எனக் கருதப்படும் காலித் ஷேக் மொஹமட் கைது செய்யப்பட்டிருந்தார்.

(ம)

## காஸாவில் மோதல்கள் தொடர்கின்றன

# இஸ்ரேலியர்களின் தாக்குதலில் 6 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

ஜெருசலேம்,மே2

பலஸ்தீன அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதியான காஸாவில் இஸ்ரேலியத் துருப்பினர் நடத்திய தாக்குதலில் இரண்டு வயதுக் குழந்தை உட்பட 6 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

காஸாவின் கிழக்குப் பகுதிக்குள் டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் ஹெலிகளின் உதவியுடன் இராணுவ நடவடிக்கைக்காக நுழைந்த இஸ்ரேலியப் படைகளே இந்த அட்டூழியங்களைப் புரிந்ததாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், பலஸ்தீன ஆயுததாரிகளுக்கும் தமக்கும் இடையில் நடந்த சண்டையில இடையில் சிக்கியே அவர்கள் உயிரிழந்தனர் என்று இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது. தாக்குதலில் காயமடைந்தவர்களில் சிலரின் நிலை மிகமோசமாக உள்ளதாக பலஸ்தீன மருத்துவர்கள் கூறுகின்றனர்.



சம்பவத்தில் காயமடைந்த ஒருவர்

இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையிலான பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக சர்வதேச அமைதித் திட்டம் ஒன்று வெளியிடப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர், இஸ்ரேலிய இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

இஸ்ரேலின் மத்திய பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலுக்கு பழிவாங்கும் இஸ்ரேலியர்களின் வழமையான நடவடிக்கையே இது என்று பொதுவாகக் கருதப்படுகின்றது.

ஆனால் காஸா சைஜையா என்ற மாவட்டத்தில் மறைந்துள்ள பலஸ்தீனத் தீவிரவாதிகளைத் தேடியே தாம் இந்த நடவடிக்கையை ஆரம்பித்ததாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார். அங்கு தீவிரவாதிகள் மறைந்திருந்த வீடு ஒன்றைத் தாம் சுற்றிவளைத்து வைத்திருப்பதாகவும் அவர் நேற்று மாலை கூறினார்.

(ம)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 08 - 1947



மறைவு 02 - 05 - 1999

### திருமதி மனோன்மணி தர்மராசா

நான்கு ஆண்டென்ன நானூறு ஆண்டுகள் சென்றாலும்
காயாது எம் மனத்தில் உம் நினைவு!

91/14, இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(17206)


### ஊர்காவற்றுறை பிரதேசத்துக்கு

# போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லை கட்டடப் பணிகள் இடைநிறுத்தம்!

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

ஊர்காவற்றுறை,மே2

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட கட்டடப் பணிகள், அவற்றிற்குப் பூரணமாக நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கென ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடத்திற்கு மொத்த மதிப்பீடாக 16 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்ட போதும், இதுவரை 11.9 மில்லியன் ரூபா நிதியே செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் - இதனை பூரணப்படுத்துவதற்கு மேலும் 4.1 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் - கூறப்பட்டது.

அதேபோன்று, ஊர்காவற்றுறையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் அரச உத்தியோகத்தர் விடுதிக்கு இதுவரை 2 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளபோதும், இதனை பூரணப்படுத்துவதற்கு மேலும் 2 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கரம்பொன் மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் கலாசார மண்டபத்தை நிறுவுவதற்கு 5 லட்சம் ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளபோதும், இதனைப் பூரணப்படுத்துவதற்கு மேலும் 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யவேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டது.

இவற்றைவிட, ஊர்காவற்றுறை துறைமுகத்தில் கடலினுள் அமிழ்ந்து கிடக்கும் 'பாஜ்ஜை' வெளியகற்றுதல், எழுவைதீவு பிரதேசத்திற்கான மின் விநியோகம் ஆகியவற்றிற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் அவையும் பூரணப்படுத்தப்படாத நிலையில் உள்ளன என்றும் -

அத்துடன், முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்படும் ஊர்காவற்றுறை தபாலகம், ஊர்காவற்றுறை நீதிமன்றம், பொலீஸ் நிலையம் ஆகியன புனரமைப்பு செய்யப்படாத காரணத்தால் அவை தனியார் கட்டடங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இயங்கிவருவது தெரிந்ததே. (எ-16)

## ஆச்சேஸ் விழா

மரியாயின் சேனையின் முக்கிய விழாவான ஆச்சேஸ் விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புனித. மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மரியன்னை திருச்சொரூபம் முன்பான வேண்டுதல் - திருப்பலி - ஆன்மீக இயக்குநர் தந்தையர்களின் மறையுரை, சேனையின் சங்கிலிச்செபம், ஞானப்பூச்செண்டு கொடுத்தல் ஆகியன இடம்பெறும்.(ஒ)

## கலந்துரையாடல்

தீவகப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு துறையூர் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழீழ விளையாட்டுத் துறையின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொள்ள இருப்பதால் இப்பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்த விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## கழிவுநீர் வாய்க்காலுக்குள் திடீரெனப் பாய்ந்த மினிபஸ்!

கொழும்புத்துறை,மே2

வேகமாகவந்த பயணிகள் அற்ற மினிபஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால், வீதியோரமாக உள்ள கழிவுநீர் வாய்க்காலுக்குள் வீழ்ந்தது.

கடந்த செவ்வாய் நள்ளிரவு வேளையில், யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் - இராணுவ முகாமுக்குச் சமீபமாக - இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறாத ஒருவரே இந்த மினிபஸ்ஸை செலுத்தி வந்ததாகக் கூறப்பட்டது.

சாரதி காயங்களுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைபெற்று வருகிறார். மினிபஸ் பலத்த சேதமடைந்துள்ளது. (எ-4-30)

## பொருண்மிய உதவித் திட்டம்

கோப்பாய்த் தரவைப் பகுதியை அண்டிய உவர்நிலப் பரப்பில் இம்முறை காலபோக செய்கையை மேற்கொள்வோருக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மானிய ரீதியில் பல்வேறு உதவித் திட்டங்களை வழங்க முன்வந்துள்ளதாக கோப்பாய் மத்தி வடக்கு விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

95 ஆம் ஆண்டின் முன்னர் பொருண்மிய நிறுவனத்தின் அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நெற்செய்கை வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-72)


## வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.எவ்)

### மன்னார் மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உப திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜி.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் இன முரண்பாட்டினால் மக்களின், குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கு மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்க திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புகளினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உப திட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்ப கட்டமாக பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார் படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு - கிழக்கில் திட்டங்களை செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | கிராமங்கள் | பிரதேச செயலாளர்/ உதவி அரசாங்க அதிபர் பிரிவு |
|---|---|---|
| மன்னார் | 01. பாப்பாமோட்டை<br>02. பெரிய கரிசல் | மாந்தை மேற்கு<br>மன்னார் |

ஆர்வமுடைய அரச சார்பற்ற நிறுவனம் இது பற்றிய மேலதிக விவரங்களை வேலை நாள்களில் காலை 9.30 மணிதொடக்கம் மாலை 3.30 மணி வரை மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரிடமிருந்து (மன்னார் மாவட்டம், தொலைபேசி :- 023 - 33103, தொலை நகரி: 023/33103, மின்னஞ்சல்: distmnr@sltnet.lk) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல்நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்ட செயலாளருக்கு/ அரசாங்க அதிபருக்கு 13.05.2003 மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும்.

**விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விவரங்களை அது உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.**

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விவரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவுசெய்த விவரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக்காரியாலயம் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையையும் நிபுணத்துவம் பெற்ற துறையையும்.
03. வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடகிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்குதல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்கல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் தொகையையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விவரங்களையும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்பத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

**எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**வே.விசுவலிங்கம்**
**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**மன்னார்.**

(C/27648)

உதயன்

# இன்று ஆரம்பமாகும் உலக இந்து மாநாடு

இரண்டாவது உலக இந்து மாநாடு இன்று இலங்கையில் ஆரம்பமாகின்றது. இற்றைக்கு சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் - 1982இல் - முதலாவது உலக இந்து மாநாடும் இலங்கையில் தான் நடந்தது. இரண்டாவது மாநாடும் இங்கு தான் நடைபெறுகின்றது.

திருமூலரால் 'சிவபூமி' என அழைக்கப்பட்டது நமது ஈழமணித் திருநாடு. இராவணன் சிவபூசை செய்து வழிபட்டு வாழ்ந்த நாடு. சிவமணங் கமழும் சமயப் பற்றும், ஆன்மீக வாழ்வும், சைவநெறியும், வைதீக ஆசாரமும் பரந்துபட்டுக் கடைப் பிடிககப்பட்ட தேசம் இது.

'தர்மத்தின் வழியே சமாதானம்' என்ற கருப்பொருளை உலகுக்குப் பறைசாற்றுகின்ற - அமைதியையும் மதங்களுக்கிடையே புரிந்துணர்வையும் வலியுறுத்துகின்ற சமயங்களில் இந்து சமயமும் பௌத்தமும் தனியிடம் வகிக்கின்றன. அவையிரண்டுமே ஆல்போல் வேர் விட்டு, விழுதூன்றி நிலைத்த நாடுகளுள் இலங்கை முதன்மையானது.

பேரவலம் தரும் போரழிவுகளினால் பாதிப்புற்று அமைதிக்காகவும், சமாதானத்துக்காகவும், கௌரவத்துடன் கூடிய நிரந்தரத் தீர்வுக்காகவும் தாகத்தோடு காத்திருக்கின்றார்கள் இலங்கை நாட்டு மக்கள்.

அந்த மக்களின் போராட்ட வாழ்விலும் சரி, அமைதியைத் தேடும் தாக நோக்கிலும் சரி, அவர்களுக்கு வழிகாட்டியாக விளங்குபவை மதங்களே.

இந்த வகையில் பெரும் எண்ணிக்கையான மக்களோடு இரண்டறக் கலந்து நிற்கும் இந்து மதத்துக்கு இன்று நம் நாட்டில் பெருவிழா.

கௌரவத்துடன் கூடிய தீர்வுக்காக - உரிமைக்காக - வீரப்போர் புரிந்த மறவர்களுக்கு "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே!" என்று யுத்த முனையிலும் உபதேசம் செய்யும் பகவத் கீதையை தன்னகத்தே கொண்டது. இந்துமதம். "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்!" என்ற வீரத்தை - மனத்தைரியத்தை - காட்டுவதும் சைவநெறியே.

அதேவேளை, மாற்றானையும் எம்மைப்போல மதித்து, சகலருக்கும் சகலதும் பெற்று வாழும் சமரச வாழ்க்கை நெறியைப் போதிப்பதும் அதே இந்து மதமே.

உரிமைக்கான போராட்டத்துக்கும் வாழ்வியலுக்கான அமைதிக்கும் இடையில் தடுமாறிக் கொண்டிருக்கும் நமது நாட்டுக்கு, நல்வழிகாட்டக்கூடிய பண்பு முறை மதங்களுக்கே உண்டு. இதனால் மத வழிகாட்டல்களை இறுகப் பற்றி நிற்க வேண்டிய காலத்தின் கட்டாய சூழ்நிலையில் நாம் நிற்கின்றோம்.

அந்த வகையில் இன்று எடுக்கப்படும் உலக இந்து மாநாடு நமது மக்களுக்கு நல்வழிகாட்டும் சமயநெறி நடவடிக்கையின் ஓர் அங்கமாக அமையட்டும்.

மத நடவடிக்கைகள் வெறும் ஆசாரங்களாகவும், கிரியைகளாகவும் வெறுமனே கடைப்பிடிக்கப்படுவனவாக அமைந்து விடாமல் அதற்கப்பால் வாழ்வியலுக்கான வழிகாட்டி முறைகளாகவும் அவை அமைவது அவசியமாகின்றது."

இனக்குரோதம், அடக்குமுறை, அதிகாரத் திணிப்பு, கொடூரப்போர் ஆகிய தீவினைகள் களைந்து, சகல மக்களும் சகல உரிமைகளும் பெற்று கௌரவத்துடனும் கண்ணியத்துடனும் மதிப்புடனும் வாழ்வதற்கான வாழ்க்கை நெறியை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு இன்று மதத் தலைவர்களின் தலையில் காலத்தின் கட்டாயமாகச் சுமத்தப்பட்டிருக்கின்றது.

மக்களை இந்த வழியில் வழிநடத்துவதற்காகத் தங்களை மதத் தலைவர்கள் புத்துயிர்ப்புப் படுத்திக் கொள்ள இன்று ஆரம்பமாகும் உலக இந்து மாநாடு போன்ற மதப் பெருவிழாக்கள் பெரிதும் உதவும்.

மதத்தின்பால் மக்கள் நம்பிக்கை வைக்கவும், மத வழிகாட்டல்களின் கீழ் சமூக நன்னடத்தை நெறிகளைப் பின்பற்ற மக்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும் கூட இத்தகைய மத நிகழ்வுகள் உதவும்; அந்த வழியில் செல்ல அவை நம்மைத் தூண்டும்.

அவ்வகையில் இந்த மாநாடு அவசியம் தேவையானதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

# இந்து மாநாட்டை முன்னிட்டு பண்பாட்டு பொருள்காட்சி

## பம்பலப்பிட்டியில் இன்று நடைபெறும்

பம்பலப்பிட்டி,மே.2

இரண்டாவது உலக இந்துமாநாட்டின் முதலாவது நிகழ்வான நூல், பண்பாட்டு பொருளகாட்சித் தொடக்க வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் கோவில், சம்பாங்கோடு 'கல்யாண மண்டபத்தில்' இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் கருஜயசூரியாவும் அவரது துணைவியார் டாக்டர் வஸந்தா ஜயசூரியாவும் கலந்து கொள்கின்றனர்.

கலாசார நிகழ்ச்சிகள் மாலை 5 மணிமுதல் இரவு 8.30 மணிவரை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் தூதர் நிருபம் சென் கலந்துகொள்கின்றார். நிகழ்ச்சிகளாக நாதஸ்வரக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து திருகோணமலை ஸ்ரீ ஷண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'வில்லூன்றிக் கந்தன் குறவஞ்சி' எனும் நாட்டிய நாடகமும் அடுத்து நாட்டிய மயூரி ஆனந்தா சங்கர் ஜயந்த் குழுவினர் வழங்கும் பரத நாட்டியமும் இடம்பெறவுள்ளன. (ம-ரி)

# நாட்டு நடப்பு

## கம்பன் கடத்தப்பட்டான்

உலகவாழ் தமிழர் எல்லாம்
உவப்புடன் இங்கு வந்து
நலம்பெறு தமிழர் வாழ்வை
நாம் காண வந்தோம் என்றார்
எழில்பெறு கம்பகோட்டம் வந்தார்
'எதனையுமே கண்டார் இல்லை
விழிப்புலன் அற்ற வௌவால் அங்கு
வியப்புடன் கண்டார் தொங்க
வல்ல அக்கம்பன் தன்னை
வருந்திடக் கடத்திச் சென்றார்
எல்லோரும் இழுத்துக் கொண்டு
ஏகினார் கொழும்பு நோக்கி
கலங்கிய கண்களோடும்
கனத்த பேர் கவலையோடும்
தலைநகர் விட்டு நானும்
தப்பியோடுவேன் என்றான் கம்பன்.

- விகடகவி.

# 2 ஆவது உலக இந்து மாநாட்டையொட்டி 8,9,10 ஆம் திகதிகளில் கலாசார விழா

## இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறும்

அரியாலை,மே2

இரண்டாம் உலக இந்து மாநாட்டை முன்னிட்டு இந்து கலாசார அமைச்சின் ஆதரவுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் கலாசார விழா மே மாதம் 8,9,10 ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளது.

இந்த மூன்று நாள் கலாசாரப் பெருவிழா ஒவ்வொரு நாளும் மாலை 4 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மண்டபத்தில் நடைபெறும் என்று மன்றத்தின் செயலாளர் வி.சிவஞானசேகரம் தெரிவித்தார்.

மாநாட்டை ஒட்டி இந்தியாவில் இருந்து வருகை தரும் கலைஞர்கள் மற்றும் ஈழத்தின் முதுபெரும் கலைஞர்கள், இளங்கலைஞர்கள் ஒன்று சேர்ந்து இந்த கலாசாரப் பெருவிழாவில் பங்குகொண்டு சிறப்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இசைக்கச்சேரி, திருமுறைக் கச்சேரி, வில்லிசை, நாதஸ்வரக் கச்சேரி, பரதநாட்டியம், நாட்டிய நாடகம், பட்டிமன்றம், கவியரங்கு மற்றும் விசேட சொற்பொழிவுகள் என்பன மூன்று நாள் விழாவில் இடம்பெறும். (ம-17)

# கோட்டையில் புதிய இராணுவ முகாம்; பல்கலை. மாணவர் ஒன்றியம் கண்டனம்

## பிரதமருக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,மே2

யாழ்.நகரப் பகுதியில் உள்ள சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களிலும் அதனை சுற்றியுள்ள வீடுகளிலும் இருக்கும் படைமுகாமை யாழ்.கோட்டைக்கும் அதன் மேற்குப் புறமுள்ள பகுதிகளுக்கும் இடமாற்றுவதற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது. அந்தப் பணிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று கோரி பிரதமர் ரணில விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றையும் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி தங்களுக்கும் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்; புதிய இராணுவ முகாங்களோ படைநிலைகளோ அமைக்கப்படக்கூடாது.

ஆனால், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி பதினாறு மாதங்கள் கடந்த நிலையிலும் பல லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அகதி முகாங்களிலும் புனர்வாழ்வு முகாங்களிலும் எந்தவித அடிப்படை வசதிகளிலுமின்றி சொல்லொணா, துன்பங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனார்கள். அவர்களது வாழ்விடயங்களில் இராணுவம் முகாமிட்டுள்ளது.

இராணுவத்தினரை மக்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றி மக்கள் தமது சொந்த வீடுகளில் மீள்குடியமர ஆவண செய்யும் படி பல தடவை கோரியும் இன்னமும் அது நடைபெறவில்லை.

இந்நிலையிலேயே யாழ்.நகரப் பகுதியில் மாநகரசபைக்கு சொந்தமான காணியில் புதிய முகாம் அமைப்பது தொடர்பான சர்ச்சை படையினரால் கிளப்பப்பட்டது. மக்களின் எதிர்பினாலும் தங்களது தலையீட்டினாலும் அது நிறுத்தப்பட்டது.

தற்போது தாங்கள் புதிய படைமுகாம் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ள பகுதியானது மாநகர சபைக்கு சொந்தமான காணியிலிருந்து ஏறத்தாழ 250 மீற்றர் மட்டும் வித்தியாசமுள்ள கோட்டைப் பகுதியாகும்.

இச்செய்தி மீண்டும் மக்கள் மத்தியில் அச்சத்தினையும் குழப்பத்தினையும் ஆத்திரத்தினையும் ஏற்படுத்திவிட்டுள்ளது.

புதிய படைமுகாம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கோட்டைப் பகுதியானது மக்கள் நடமாட்டம் மிக அதிகமான நகரப் பகுதியாகும். இதில் படைத்தளம் அமைவதனால் மக்கள் பல நெருக்கடிகளையும் இராணுவ கெடுபிடிகளையும் சந்திக்க வேண்டி வரும். குறிப்பாக பெண்கள் பெரும் பாதிப்புக்குள்ளாக வேண்டியிருக்கும்.

இப்பகுதியை சுற்றிய பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாவனையிலுள்ள வீரசிங்கம் மண்டபம், பொது நூலகம், விளையாட்டு மைதானம், தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம், பொது சந்தை, யாழ்.மாவட்ட விவசாய நுகர்வு கூட்டுறவுச் சங்க சமாசம், பிரபலமான இந்து ஆலயமான முனியப்பர் ஆலயம், யாழ்.மத்திய கல்லூரி, சுற்றுலா விடுதி என்பன அமைந்துள்ளன.

அத்துடன், புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தின் கீழ் உடனடியாக புனரமைக்கப்பட வேண்டிய பிரதம தபாற்கந்தோர், சுப்பிரமணியம் பூங்கா, நீதிமன்ற வளாகம், மார்பு சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதி என்பனவும் இப்பகுதியிலேயே அமையவுள்ளன.

அராலி, வட்டுக்கோட்டை பிரதான வீதியும் தீவகத்தினை குடாநாட்டுடன் இணைக்கும் பிரதான வீதியும் முழுமையாக மக்கள் பாவனையிலிருந்து துண்டிக்கப்படக் கூடிய அபாய நிலை உள்ளதுடன் மேற்சொன்ன புனரமைப்பு புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் நிறுவப்படவுள்ள அனைத்து கட்டுமானப் பணிகளும் தடைப்படக்கூடிய ஆபத்தான சூழ்நிலை புதிய முகாம் அமைக்கும் திட்டத்தால் தோன்றியுள்ளது. அதுமட்டுமன்றி பண்ணைக் கடலில் மீன்பிடித் தொழில் ஈடுபடும் பல நூற்றுக்கணக்கான மீனவர்களின் தொழில் முயற்சிகள் உடனடியாக பாதிப்புள்ளாக கூடிய அபாய நிலையுமுள்ளது.

இதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் யாழ்.கோட்டை பகுதியில் படைமுகாம் அமைக்கப்படுவதனை முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம். மக்களின் அடிப்படை மனித உரிமையை மீறுகின்ற, மக்களது விருப்பத்திற்கு மாறான இச் செயலால் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடக் கூடும். இது சமாதான முயற்சிகளை பாதிக்கும் என்பதால் இது விடயத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டு முகாம் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்த வேண்டும் என மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம். (ம)

**நாளை**
சித்திரை 20
சனிக்கிழமை
03.05.2003
திதி : துதியை
முன்னிரவு 10.01 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
பிற்பகல் 4.11 வரை
சுபநேரம் : 2.56 - 4.26
ராகுகாலம் : 8.56 - 10.26
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**
அச்சம் எப்பொழுதும் அறியாமையிலிருந்தே எழுகிறது.

## பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டபோதும்

# தமிழ் - முஸ்லிம் உபகுழு தொடர்ந்தும் கூட்டப்படும்

## மட்டு.,அம்பாறை சிறப்புத் தளபதி தெரிவிப்பு

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேசசுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளபோதும், தமிழ் - முஸ்லிம் குழுகளுக்கு இடையிலான பேச்சுக்கள் தொடரும் என்று மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளும் - முஸ்லிம் அமைப்புக்களும் இணைந்து அமைத்துள்ள உப-குழுவின் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களுக்கு மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கும் - முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த உபகுழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த உப-குழுக்கூட்டம் தொடர்ந்து இடம்பெறும். தமிழ் பேசும் இரு இனங்களின் மக்கள் சார்ந்த பிரச்சினைகள் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றன. அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்ட போதும், உப-குழுக்களின் கூட்டங்கள் நிறுத்தப்பட்டபோதும் தமிழ் - முஸ்லிம் மக்கள் சார்பான உபகுழு தொடர்ந்து கூடும் - என்றார் அவர். (ம-3)

## குப்பிழான் பகுதியில் சட்டவிரோத மரம் தறிப்பு தொடர்கிறது

யாழ்ப்பாணம்,மே2

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குப்பிழான் போன்ற, மக்கள் மீளக் குடியமராத பகுதிகளுக்குள் செல்லும் சிலர் அப்பகுதிகளில் வளர்ந்துள்ள பயன்தரு மரங்களை தறித்து விறகுக்காக எடுத்துச் செல்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப்பகுதியில் உள்ள பனைமரங்கள் பெருமளவு எண்ணிக்கையில் பறிக்கப்பட்டு, பனங் காணிகள் வெறுமையாகக் காட்சியளிக்கும் இந நிலையில் இத்தகைய விறகுவெட்டிகளால் இப்பகுதிகளில் எஞ்சியுள்ள ஏனைய மரங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-69)

## கல்லூரிக்கு காணி அன்பளிப்பு

முன்னாள் மாவட்ட நீதிபதி அமரா எஸ். சண்முகலிங்கம் ஞாபகார்த்தமாக கரவட்டி விக்கினேஸ்வரக் கல்லூரிக்கு அன்னாரது குடும்பத்தினரால் 7 பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இக்காணியில் பெண்கள் வலைபந்தாட்ட ஆடுகளம் அமைக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் தெரிவித்தார். (ம-173)

## நாவற்குழியில் இன்று வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல்

தென்மராட்சி,மே2

நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பின்வரும் இடங்களில் இன்று வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என நாவற்குழி பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ. சிரேஷ்டகுமார் அறிவித்துள்ளார்.

காலை 9.00மணி தொடக்கம் 11.00மணிவரை நாவற்குழி தெற்கு சனசமூக நிலையத்திலும்-

காலை 11.15மணி தொடக்கம் 12.30மணிவரை நாவற்குழி கிராம சபை அலுவலகத்திலும் -

பிற்பகல் 12.45 தொடக்கம் 1.30 மணிவரை நாவற்குழி பாடசாலை வீதி, சனசமூக நிலையத்திலும் -

பி.ப.1.45 மணி தொடக்கம் 3.00 மணிவரை நாவற்குழி பள்ளம் பகுதியிலும் - வைத்து நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## உள்ளூராட்சி அமைப்புகளில் ஊழியர் வெற்றிடம்

யாழ்ப்பாணம்,மே2

யாழ்மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளில் சுமார் 100 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்து வகையான உத்தியோகத்தர்கள் இப்பதவி வெற்றிடங்களில் நிரப்பப்படவேண்டியுள்ளனர்.

நிர்வாக சேவை உத்தியோகத்தர் 14 பேரும், எழுதுவினைஞர்கள் 28 பேரும், நூலகர்கள் 24 பேரும், தொழில்நுட்ப உதவியாளர்கள் 12 பேரும், வருமானப் பரிசோதகர் 7 பேரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 10பேரும், உதவி மருந்துப் பரிசோதகர்கள் 02 பேரும், களஞ்சியக் காப்பாளர்கள் 2 பேரும், தட்டெழுத்தாளர் ஒருவரும், காசாளர் ஒருவரும் தற்போது தேவைப்படுகின்றனர்.

இத்தகைய வெற்றிடங்களால் உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச சபைகள், உள்ளூராட்சித் திணைக்களம் போன்றவற்றில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-12)


### தேவை

பெயின்ற் விற்பனை, பாதணி விற்பனை மற்றும் சினிமா தொழில் என்பவற்றில் அனுபவமுள்ள ஆண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு :
நாகம்ஸ் பாட்டா
சுன்னாகம்.
(17413)

### இலகுவாகவும் வேகமாகவும் தமிழ்மூலம் ஆங்கிலம்

தேசிய ஆங்கில டிப்ளோமா
(NDEC, NDEW, NDET)

வழிகாட்டி நூலும் பயிற்சியும் ரூபா 25 மட்டும். ரூபா 12.50 இற்கான இரண்டு தபால தலையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

PSALMS TECHNOLOGIES (PVT.) LTD
22-1/3,Gall Road,
Dehiwala.


# பாவனைக்குதவாத பாண், பணிஸ் சுழிபுரம் பகுதியில் எரித்து அழிப்பு

## சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே2

சுழிபுரம் பகுதியில் மனித பாவனைக்கு உதவாத வகையில் இருந்த பாண், பணிஸ் போன்ற உணவுப் பொருள்கள் சுகாதாரப் பகுதியினரால கைப்பற்றப்பட்டு உடன் தீ மூட்டி எரிக்கப்பட்டன.

இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று சுழிபுரம் பகுதியில் இடம்பெற்றது.

மனித பாவனைக்கு உதவாத பாண், பணிஸ் மற்றும் உணவுப் பொருள்கள் இப்பகுதியில் விற்பனை செய்வதாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்தே அதிகாரிகள் இந்த திடீர் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சோதனையில் 140 இறாத்தல் பாணும் 120 சோடி பணிஸும் பாவனைக்குதவாத நிலையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இது தொடர்பாக இரு பேக்கரி உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் சுழிபுரம் - சங்கானை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-185-135)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 12 - 1946



மறைவு 13 - 05 - 2002

### அமரர் கணபதிப்பிள்ளை கிருஷ்ணானந்தன்

திதி: 02.05.2003

13.05.2002 அன்று இறைவனடி எய்திய எமது அன்புத் தந்தையின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (02.05.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி: சரஸ்வதி
பிள்ளைகள்: சாரா, சுதர்சன் (இந்தியா), சுதினா (சுவிஸ்), சிவதாஸ் (லண்டன்), சுதாகரன் (லண்டன்), ஜெயாகரன்

தற்காலிக முகவரி:
உடுப்பிராய் தெற்கு,
உடுப்பிராய்.
நிரந்தர முகவரி:
ஏழாலை வடக்கு, ஏழாலை.
(17429)

## யாழ். பல்கலைக்கழகம் ஏல விற்பனை

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் 08-05-2003 அன்று காலை 10மணிக்கு பகிரங்கமாக ஏலத்தில் விற்கப்படும்.

மேற்படி பொருள்களை 07-05-2003 அன்று காலை 10.30 மணியிலிருந்து 12.30 மணிவரை உதவிப் பதிவாளர் நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

1. ஆய்வுகூட உபகரணங்கள்
2. தொலைக்காட்சிப் பெட்டி
3. தட்டெழுத்து இயந்திரம்
4. மணிக்கூடுகள்
5. தராசுவகைகள்
6. இரட்டிப்பு இயந்திரங்கள்
7. மின்பிறப்பாக்கிகள்
8. மண்எண்ணெய் அடுப்புகள்
9. குளிர்சாதனப்பெட்டிகள்
10. விளையாட்டு மேசைகள்
11. நுணுக்குக் காட்டிகள்

ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் பணத்தை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பொருள்களை அன்றைய தினமே அப்புறப்படுத்துதல் வேண்டும்.

(c/27551) - பதிவாளர்.

## ஆறாம் மாத நினைவு அலைகள்

மலர்வு 31 - 12 - 1946



உதிர்வு 05 - 11 - 2002

### திருமதி குகதாஸக்குருக்கள் நாகலட்சுமி அம்மா

திதி: வளர்பிரதமை (02-05-2003)

ஆறுமாதம் ஆனதுவே - உன் ஆவி பிரிந்து
தேறுதல் இன்றித் தவிக்கின்றது எமது நெஞ்சம்
கூறுவதற்கு வார்த்தையில்லை உன் பிரிவுத்துயர்
நாறுமாதம் அகன்றாலும் உன் நிலவுமுகம் நினைவு அகலாது.

அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (17424)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்.


## COMPUTER COURSES

New Batches Start on
Batch 1 :25.05.2003
Batch 2 :28.05.2003
Batch 3 :14.06.2003
at 10.00 A.M



உங்கள் முயற்சிக்கு....



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



- Diploma in Computer Programming
- Diploma in Java Programming
- Diploma in Visual C Programming
- Diploma in Visual Basic Programming
- Diploma in Information Technology

AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE COURSE IN COMPUTERIZED ACCOUNTING

NEXT GENERATION

ARE YOU PLANNING TO STUDY IN U.K!
ARE YOU WILLING TO GET EMPLOYMENT ABROAD!
ARE YOU ANXIOUS TO GET FOREIGN SCHOLARSHIP AND TRAINING!

IELTS

International English Language Testing System Opens the way Examination is held by British Council Colombo. Certificate is issued by the University of Cambridge, London.

- Diploma in MS Office
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology
- Diploma in Eng. Drawing & AutoCAD
- Diploma in Desk Top Publishing

Adobe PageMaker | Adobe Premiere | CorelDRAW | MS Excel | ORACLE 9i
Adobe Photoshop 07 | Macromedia Flash | MS Word | MS Access | Pascal

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )

Head Office:
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk

Branches:
IIS, Nelliyady, Karaveddy
IIS, Main Road, Chankanai.

# ஆதிக்குடிகள் மத்தியில் சிவவழிபாடு வரலாற்று ஆய்வுகள் இதனை உணர்த்தும்

**இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்துள்ள 2ஆவது உலக இந்து மாநாடு இன்று கோலாகலமாக - பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கொழும்பில் ஆரம்பமாகிறது. இந்தத் தருணத்தில் 'இலங்கைத் திருநாட்டின் ஆதிக் குடிகள் மத்தியில் சிவவழிபாடும், அதனோடு இணைந்த பண்பாட்டு மரபுகளும்' எவ்வாறு நிலவி வந்தன என்பதை ஆதார பூர்வமாக ஆராய்கிறார் கட்டுரையாளர்.**

திருமூலர் திருமந்திரம் 2701ஆம் பாடலிலே இலங்கையைச் சிவபூமிக்குள் அடக்கியுள்ளார்.

*'மேரு நடுநாடி மிக்கிடைப் பிங்கலை*
*கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்*
*சாருந் திலைவனந் தன்மா மலையத்தூ*
*டேறுஞ் சுழுனை இவை சிவபூமியே'*

தில்லைச் சிதம்பரத்துக்கும் பொதிகைமலைக்கும் இடைப்பட்ட தமிழகம் சிவபூமி என்றும், மேருமலைக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட பகுதி சிவபூமி என்றும் பெயருக்கு ஓரளவு உரிமை உடையதென்றும் கூறப்பட்டுள்ளது. பௌராணிக இலக்கியங்களுள்ளே பயின்றுவரும் மேருமலை பூமியிலுள்ள எந்த மலையையும் குறிக்கின்றதா என்பது இன்னும் தெளிவாகவில்லை.




இந்து மாநாட்டை முன்னிட்டு திருகோணமலையில் இருந்து வந்த ஊர்தி நேற்றுமுன்தினம் இரவு பம்பலப்பிட்டியில் உள்ள இந்து கலாசார அமைச்சின் அலுவலகம் முன்பாகச் சென்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

சிவபுராணங்களிலே கையாலய மலை பற்றிப் பரவலான குறிப்புகள் இடம்பெறுகின்றன. இமயமலைக்கு வடக்கிலே திபெத்திலே கைலாயமலை அடையாளம் காணப்பட்டுள்ளது. வங்காளத்துக்கு வடதிசையிலே கைலாயம் அமைந்துள்ளது. ஆகம வழிபாடு வங்காளத்தின் வடபகுதியிலேயே தோற்றம் பெற்றதாக இன்றைய ஆய்வாளர் கருதுகின்றனர்.

## பௌத்த மத வருகை

இலங்கையின் வரலாறு கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலே பௌத்தமத வருகையுடன் தெளிவடைகின்றது. பௌத்த மதம் இன்றைய பீகார் மாநிலத்திலிருந்து இலங்கைக்கு வந்தது. ஆசோக பேரரசன் அனுப்பிய மகிந்தன் தலைமையிலான பௌத்த குருமார் ஆகாய மார்க்கமாக மிகுந்தலைக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. ஆகாயமார்க்கமாக வந்தனர் என்பதை ஏற்க மறுக்கும் இன்றைய அறிஞர், தென்னிந்தியாவினூடாக அன்றி ஒரிஸ்ஸா, வங்காளம் என்னும் மாநிலங்களிலுள்ள துறைமுகங்களூடாக வந்திருக்க வேண்டும் என்று கொள்வர்.

மகாவம்சம் இலங்கைக்குச் சிங்களவர் வருகையை முந்நூறு ஆண்டுகள் முன்னெடுத்துச் செல்கின்றது. வங்காளம், ஒரிஸ்ஸா என்னும் மாநிலங்களிலுள்ள பகுதிகளிலேயே சிங்களவர்களின் முன்னோர் வாழ்ந்ததாகவும் விஜயனும் தோழர்களும் அப்பிரதேசத்திலிருந்து கடல் மார்க்கமாக இலங்கை வந்ததாகவும் கூறப்படுகின்றது.

மகாவம்சத்தின்படி, விஜயன் இங்கு வந்தபோது இலங்கையிலே நாகர்களும், இயக்கர்களும் வசித்தனர். கௌதம புத்தர் தம்முடைய மதத்தை இலங்கையிலே நிலைநிறுத்துவதற்காக மூன்றுமுறை ஆகாய மார்க்கமாக நேரிலே வந்தார் என்றும் இலங்கையின மேற்குத் திசையிலுள்ளதும் இன்று களனி என்று சொல்லப்படுவதுமான கல்யாணிக்கு வந்த அவர் அண்மையில் இருந்த மலைச் சிகரத்திலேயே தம்முடைய திருவடியின் அடையாளத்தைப் பொறித்துச் சென்றார் என்றும் கூறப்படுகின்றது.

இலங்கையின் வடதிசையில் உள்ள நாகதீபத்துக்கு வந்த புத்தர் ஓர் இரத்தினச் சிம்மாசனம் தொடர்பாக நாக அரசர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைத்து அந்தச் சிம்மாசனத்தை தமக்குரிய புனித சின்னமாக்கினார். இலங்கையிலே மேற்குத் திசையிலும் வடமேற்குத் திசையிலும் நாகர் ஆதிக்கம் செலுத்தி வந்ததினால், நாகத் திசை என்ற பெயர் அத்திசைகளைக் குறிக்க வழங்கியதை சென்னைத் தமிழ் பேரகராதி, யாழ்ப்பாணத்திலே தொகுக்கப்பட்ட அகராதிகளிலிருந்து எடுத்துக் காட்டுகிறது.

கௌதம புத்தர் இயக்கர்கள் வாழ்ந்த மகியங்கனைப் பகுதிக்கும் வந்திருந்தார். இயக்கர்களிடம் எதிர்ப்பைக் கண்ட அவர் இயக்கர்களை அவ்விடத்திலிருந்து விரட்டி, தம்முடைய மதத்தை அவ்விடத்திலே, நிலைநிறுத்தினார் என்று கூறப்படுகிறது. சிவ வழிபாட்டுக்காரர்களாகவிருந்த இயக்கர்கள் பௌத்தத்தை ஏற்க மறுத்திருக்கக்கூடும் என்று நம்ப இடமிருக்கிறது.

## ஆதிக்குடிகள்

நாகர்கள், இயக்கர்கள் என்பவர் யார் என்பது பற்றி அறிஞர்களிடையே ஒருமைப்பாடு இன்னும் ஏற்படவில்லை. தென்னிந்தியாவிலே திராவிட இனப் பண்பாட்டோடு தொடர்புடைய பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையில் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. நாகர்களும், இயக்கர்களும் திராவிடர்களாக, தமிழர்களாக இருக்க வேண்டும் என்ற கருதுகோள் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்தியாவின் வடகீழ் எல்லைப்புறத்திலே நாகர்கள் என்ற மங்கோலியத் தொடர்புள்ள இனத்துக்கு நாகலாந்து என்று தனி மாநிலம் காணப்படுகின்றது. வரலாற்றுக் காலத்திற்கு முன்பும் வரலாற்றுக் காலத்திலும் நாகர்களைப் பற்றிய பல குறிப்புகள் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் கிடைக்கின்றன. நாகமன்னர்கள் ஆரிய மன்னர்களோடும், திராவிட மன்னர்களோடும் வேறுபாடு காட்டாது கலப்புக்களை ஏற்படுத்தி வந்துள்ளனர். சங்ககாலப் புலவர்களிலுள்ளே நாகர் என்று பெயருள்ளவர் சிலர் காணப்படுகின்றனர்.

பண்டைக்காலத் தமிழகத்திலே சேரநாடு என்று பெயர் பெற்றிருந்த பிரதேசத்தின் பெரும்பகுதியாக அமைந்து, இன்றும் தமிழோடு ஒப்புமைகள் பலவற்றைக் கொண்டு விளங்கும் மலையாள மொழி வழங்கும் கேரள மாநிலத்திலே நாயர் என்னும் சமூகத்தினர் வாழ்கின்றனர். நாகபாம்பு வழிபாட்டின் எச்சசொச்சங்கள் அவர்களிடையே இன்றும் காணப்படுகின்றன.

நாகர் என்ற சொல் நாயர் என்று பிரிந்து வழங்குகின்றன என்று கொள்ளலாம். கேரளமும் தமிழ் நாட்டுக்கு மேற்குத் திசையில் அமைந்திருக்கின்றது. நாகர் வடகீழ் இந்தியாவிலிருந்து வந்தவர்களானால் பண்டைக்காலத் தமிழகத்திலும் பண்டைக்கால இலங்கையிலும் மேற்குத் திசையிலே குடியேறியது ஏன்? எப்படி? என்ற வினாக்கள் எழுகின்றன.

தமிழகத்தின் தென்மேற்கிலே நாகர் கோயில் என்ற துறைமுகமும் தென்கிழக்கிலே நாகபட்டினம் என்ற துறைமுகமும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையிலே நாகர்கோயில் என்றொரு துறை உண்டு. நாகதம்பிரான் வழிபாட்டுச் சின்னங்கள் வடஇலங்கையிலே ஆங்காங்கு காணப்படுகின்றன. இலங்கையின் வடமேற்குத் திசையிலே பாடல் பெற்ற சிவத்தலமான திருக்கேதீச்சரம் காணப்படுகிறது.

கேது வழிபட்ட தலமாதலால் திருகேதீஸ்வரம் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுவது நாகர்கள் வழிபட்ட சிவத்தலம் என்பதையே குறிப்பதாக இருக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர் கோவிலும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாகபட்டினமும் இலங்கைக்கு நாகர்கள் வந்த வழிகளா அல்லது இலங்கையிலிருந்த நாகர்கள் தமிழகத்துக்குச் சென்ற வழிகளா என்பது ஆராய்ச்சிக்குரியது.

கௌதமபுத்தர் காலத்திலேயே பௌத்த சமயத்தை விரும்பி ஏற்றுவிட்டார்களாகக் கூறப்படும் நாகர்கள் அநுராதபுரத்திலிருந்த சிங்கள மன்னர்கள் பௌத்த சமயத்தை ஏற்றுக்கொண்டதும் அவர்களுடன் நெருங்கிக் கலந்தனர். மகாவம்சம் குறிப்பிடும் சிங்கள மன்னர் வரிசையிலே தேவநம்பியதீசனின் தம்பியாக ஒரு நாகன் குறிப்பிடப்படுகின்றான். அவனுடைய தாய் நாகர் குலத்தவளாக இருந்திருக்க வேண்டும்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு நடுப்பகுதியிலிருந்து மூன்றாம் நூற்றாண்டு நடுப்பகுதி வரையிலே, மன்னர்கள் பலர் நாகர்களாக விளங்குவதைக் காணலாம். திருமணத் தொடர்புகள் மூலமாக, நாகர் குலத்தவர்கள் அநுராதபுரச் சிம்மாசனத்தைக் கைப்பற்றி இருந்தனர் என்றே இந்த நிலைமைக்கு விளக்கம் கொடுக்கவேண்டும்.

மகாவம்சம் முதலிய பாளி நூல்களும், மணிமேகலை முதலிய தமிழ நூல்களும் குறிப்பிடும் நாகதீவு அல்லது மணிபல்லவம் எது என்பது ஒரு காலத்திலே ஆராய்ச்சிக்குரிய விடயமாக இருந்தது. இன்றைய நயினாதீவே அந்த இடம் என்று ஒரு காலத்திலே கருதப்பட்டது. அதனால், அங்கே நாகதீவு விகாரை கட்டியெழுப்பப்பட்டு, அது சிங்கள பௌத்தர்களின் யாத்திரைத் தலமாக மாறியுள்ளது. 1936இல் வல்லிபுரத்திலே கண்டெடுக்கப்பட்ட பொன்னேட்டுச் சாசனம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் நாகதீவு என பெயர் பெற்றிருக்க வேண்டும் என்ற விளக்கத்தைத் தந்துள்ளது.

## நாகர்களின் குடியிருப்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடுவரை, மாதோட்டம் உட்பட இலங்கையின் வடமேற்குப் பிரதேசம் நாகர்கள் குடியிருப்பாக ஒரு காலத்திலே விளங்கியிருக்க வேண்டும். வரலாற்றுக் காலத்திலே, இலங்கையின் ஏனைய சில பகுதிகளிலும் தென்கீழ திசையிலுள்ள மகாகமம் வடகீழ் திசையிலுள்ள கொட்டியாரம் மத்தியிலுள்ள மாத்தளை முதலிய இடங்களும் நாகர் குடியிருப்புக்களாக மாறின.

வரலாற்று ஆய்வுக்கு, இலக்கியச் சான்றுகளிலும் பார்க்க சாதனச் சான்றுகள் வலுமிக்கனவாகக் கொள்ளப்படுகின்றன. தமிழகத்துச் சங்ககாலத்துக்குச் சமமான காலத்தைச் சேர்ந்தவை ஆதிப்பிராமிச் சாசனங்களிலே நாகர் அரசுகள் குறிப்பிடப்படும் இடங்களை நோக்கவேண்டும். நாகர்கள் நாடு முழுவதும் பரவி வாழ்ந்தமை அச்சாசனங்களிலே வரும் ஆள்பெயர்களிலிருந்து புலப்படுகிறது.

வடமாகாணத்தின் தென் எல்லையில் உள்ள வவுனியாவுக்கு அண்மையில் உள்ள பெரிய புளியங்குளத்துக் குகைச் சாசனங்களிலே நாக மன்னன் குறிப்பிடப்படுகின்றான். நாகதீவிலிருந்த மக்கள் வவுனியா வரை பரவி அப்பிரதேசத்தில் அரச உரிமையையும் பெற்றிருந்திருக்கின்றனர்.

வடமேற்கு மாகாணத்திலே, நாக மன்னர்கள் பற்றி இரண்டு சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் ஒன்று பழைய பிராமிச் சாசன காலத்தையும் மற்றது சிறிது பிந்திய காலத்தையும் சேர்ந்தது. இலங்கையிலுள்ள மிகப் பழைய சிவன் கோவில்களுள் ஒன்றாகக் கருதப்படும் முன்னேஸ்வரம் வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்தது. அனுராதபுர மாவட்டத்திலும் ஒரு சாசனம் நாகமன்னனைக் குறிப்பிடுகின்றது. அந்தச் சாசனம் காணப்படும் இடம் வடமாகாண எல்லைக்கு அண்மையிலே, மேற்குத் திசையிலே அமைந்துள்ளது.

மத்திய மலைநாட்டிலே கண்டி மாவட்டத்திலே இருவேறு இடங்களிலுள்ள சாசனங்கள் ஒவ்வொன்றும் நாகமன்னரைக் குறிப்பிடுவது வியப்பாகவுள்ளது. நாக மன்னர் ஆட்சிகண்டி மாவட்டத்திலே பரவி இருந்தமைக்கு இலக்கியச்சான்று கிடைக்கவில்லை. இச்சாசனங்கள் மட்டுமே சான்று பகர்கின்றன.

வடக்கு மாகாணம், வடமேற்கு மாகாணம், மத்திய மாகாணம் முதலிய பிரதேசங்களிலே நாகஅரசு ஒன்றா? பலவா? பலவானால் எத்தனை இருந்தன என்பதைத் தீர்மானிக்கத் தேவையான சான்று இதுவரை கிடைக்கவில்லை. நாக அரசு கிழக்கு இலங்கையிலும் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளமைக்குச் சான்று கிடைத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குசலங்கந்தக்குகைச் சாசனத்திலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள மொட்டைக்கல்லுக்குகைச் சாசனத்திலும் நாக உபராசர்கள் குறிப்பிடுகின்றனர். யுவராசா என்ற வடசொல்லே உகராசா என்று பாகத்திரிபு பெற்றுள்ளது. கிழக்கிலே இளமைப்பருவத்திலே இளவரசராக முடிசூடி அனுபவம் பெற்றபின் வடக்கிலே முழு அரசராகப் பதவி உயர்வு பெற்றுப் போகும் வழக்கம் நாகமன்னர்களுக்குள் இருந்திருக்குமா என்பது ஆராயத்தக்கது.

நாகர்கள் இலங்கையின் வட கரையிலிருந்தும் மேற்குக் கரையிலிருந்தும் சிறிது சிறிதாக இலங்கை முழுவதும் பரவி இருக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ்நாட்டுக் கடற்கரைக்கு எதிர் கடற்கரையிலே நாகர் குடியிருப்புகள் இலங்கையிலே அமைந்திருந்ததனால் இலங்கை நாகர்கள் தமிழர்களாக அல்லது தமிழர்களோடு உறவுகளை வளர்த்துக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். இயக்கர்கள் என்போர் யார் என்பது இன்னும் சிக்கலான வினாவாகக் காணப்படுகிறது.

மகாவம்சத்தின்படி இயக்கப் பெண்ணான குவேனியை மணம் முடித்த விஜயன், அவளின் உதவியுடன் இயக்கர்களைக் கொன்றொழித்து இலங்கை மன்னன் ஆகின்றான். பின்பு குவேனியையும் இரண்டு பிள்ளைகளையும் காட்டுக்கு விரட்டி விடுகிறான். அப்பிள்ளைகளின் பரம்பரையே இன்றுள்ள வேடர்கள் என்று கூறப்படுகிறது. இது எவ்வாறாயினும், இயக்கர்களின் பரம்பரையில் வந்தவர்களே வேடர்கள் என்ற கருத்து இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

வேடர்களின் முன்னோர் நாகர்களுக்கும் முன்பு இலங்கைக்கு வந்தவர்களாக இருக்க வேண்டும். நாகர்கள் காலப்போக்கிலே தமது தனித்துவத்தை இழந்து தமிழர், சிங்களவர்கள் என்போருடன் இரண்டறக் கலந்துவிட்டனர். இயக்கரும் பெரும் பகுதியினர் இவ்வாறே மாறி விட்டனர். இயக்கருள் ஒரு பகுதியினர் இன்றும் தமது தனித்துவத்தைப் பேணும் வேடராக வாழ்ந்து வருகின்றனர்.

பேராசிரியர்
ஆ.வேலுப்பிள்ளை

'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் முனனோடித் தமிழர்வரலாற்று நூலை எழுதிப் புகழ்கொண்ட கனகசபைப் பிள்ளை இயக்கர்களும் மத்திய ஆசியாவிலிருந்து இமயமலையூடாக இந்தியாவுக்குப் புகுந்த மங்கோலியத் தொடர்புள்ள இனத்தவரே என்பர். இவர்கள் ஒரு காலத்திலே ஆரிய மயமாக்குதலைத் தீவிரமாக எதிர்த்து நின்றவர்களாக இருந்திருக்க வேண்டும்.

## இராவணன் திராவிட மன்னன்

இராமாயணப் புகழ்பெற்ற இராவணன், இலங்கை இயக்கர்குல மன்னன ஆவான். ஆரிய திராவிடப் பூசல் கூர்மையடைந்துள்ள நிலையிலே, தமிழ் நாட்டிலே வட இந்திய இராமனை எதிர்த்துப் போராடிய இராவணன் திராவிட மன்னனாகவும், தமிழ் மன்னனாகவும் போற்றப்படுவதைக் காணலாம். தமிழ்நாட்டு மக்கள் இராவணன் மேல் உரிமை பாராட்டுவது இருபதாம் நூற்றாண்டு நிகழ்ச்சியாகும்.

இயக்கர்களைக் கைலாய மலையோடு தொடர்புபடுத்தும் மரபு அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வங்காளம் ஊடாக வந்தவர்கள் ஆகலாம் என்ற நம்பிக்கைக்கு ஆதாரமாகக்கூடும். இராவணனுடைய உறவினனும் மூத்தவனுமான குபேரன் இலங்கை அரசை இராவணனுக்கு விட்டுவிட்டு கைலைக்குச் சென்றான் என்று கூறப்படுகின்றது.

கைலாயநாதன் என்ற பெயர் சிவபெருமானை மட்டுமல்லாது குபேரனையும் குறிக்கின்றது. குபேரசைலம் என்பது கைலாயமலையே என்று அகராதி கூறும். இராவணன் கைலாயமலையைத் தூக்கிக்கொண்டு இலங்கைக்கு வர முயன்றான் எனப்படுகிறது. தன் இனத்தவர்களான இயக்கர்களுக்கு கைலாயமலை மேல் இருந்த உரிமையையே அவன் நிலைநாட்ட முயன்றான் போலும்.

## தேவாரப் பதிகங்களில் சிவவழிபாடு

வங்காளத்தின் வடபகுதியே தாந்திரீக வழிபாடு அல்லது ஆகம வழிபாட்டின் வளர்ப்புப் பண்ணை என்று கூறப்படுகிறது. கைலாயத்தைத் தலைமைத்தானமாகக் கொண்ட சைவாகம முறையிலான வழிபாடு, வங்காளத்திலே காலத்தால் மிகப் பழையது. இராவணன் முதலிய இயக்கர் சிவ வழிபாட்டுக்காரர் என்பது இராமாயணத்திலே அழுத்திக் கூறப்பட்டுள்ளது. சைவசமயக் குரவர்களுள் முதல் இருவரான திருஞானசம்பந்தரும், திருநாவுக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

TaTa 1210 1/2 Body Lorry 42தொடரிலக்கமுடையது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 16, கண்டி வீதி, சாவகச்சேரி.

(17261)

## வாடகைக்கு

இரு மாணவர்கள் இணைந்து கல்வி பயில அமைதியான அறை வாடகைக்குண்டு. விவரங்களுக்கு: 114/19, நாவலர் வீதி, தேவி அச்சக ஒழுங்கை), யாழ்ப்பாணம். போன் 2789.

(17430)

## வாடகைக்குண்டு

சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த சட்டத்தரணியும் தற்போது இளைப்பாறிய மேலதிக நீதிவானும், மேலதிக நீதிபதியும் ஆகிய சிவகுரு சுரேந்திரனின் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்பு: திரு.சி. சற்குணநாதன் (B.M.C), 16, கண்டி வீதி, சாவகச்சேரி.

(17260)

## தவறிவிட்டது

மீசாலை மேற்கு கார்த்திகேசு வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் அமிர்தலோஜினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 605440274V), விசேட அடையாள அட்டை (இல.091008192) என்பன 21-04-2003 அன்று யாழ்.பஸ் நிலையத்தில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விமாகி, 27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(17416)

# வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்,மே2

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாணவர்களின் உரையரங்கம் நடைபெறவுள்ளன.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்களான செல்வன் ம.சுதர்சன் 'எமதுசமய இலக்கியங்கள்' என்ற தலையங்கத்திலும்-செல்வன் பொ.நிஷாந்தன் 'சிவமுகூர்த்தங்கள்' என்ற தலையங்கத்திலும் உரையாற்றுவர்.

இணுவில் மத்திய கல்லூரி மாணவர் கணேசதாஸ் விகர்ணன் 'சமயமும் வாழ்வும்' என்ற தலையங்கத்தில் உரை நிகழ்த்துவார்.

(எ-135)

# மோ.சைக்கிள் சாரதிகள் 250 பேர் தண்டம் செலுத்தினர்

யாழ்ப்பாணம்,மே 2

ஹெல்மெட், லைசென்ஸ், இன்சூரன்ஸ் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய 250இற்கும் மேற்பட்டோர் கடந்த புதனன்று மல்லாகம் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டப்பணம் செலுத்தியுள்ளனர்.

அண்மைக்காலத்தில் இத்தகைய குற்றத்திற்காக இவ்வளவு பெரிய எண்ணிக்கையானோர் தண்டப்பணம் செலுத்தியமை இதுவே முதற்றடவை

(ம-185)

# கிணறுகள் புனரமைப்பு

தென்மராட்சி,மே 2

யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஏழு பொதுக் கிணறுகள் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் புனரமைக்கப்படவுள்ளன.

உதயசூரியன் வீதி, புனித விகோரியார் வீதி, சித்தி விநாயகர் வீதி, கற்குளி ஆஸ்பத்திரி முன்பாக, மட்டுவில் வேரக்கேணி, புகையிரத நிலைய வீதி ஆகிய இடங்களிலுள்ள பொதுக்கிணறுகளை புனரமைக்கவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

ஏற்கனவே நுணாவில் ஏற்றத் தடிக் கிணறு, கல்வயல் பழைய பாடசாலை வீதி கிணறு ஆகியவை நகரசபையினால் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ம-117)

# புலம்பெயர்ந்து வாழும் நிலையிலும் தாயகத்தை நேசிக்க வேண்டும்

## மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,மே2

புலம்பெயர்ந்து வாழும் நிலையிலும், தாய் நாட்டின் தேவைகளை அறிந்து உதவுபவர்கள் போற்றத்தக்கவர்களே.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

மாதகலைச் சேர்ந்தவரும் அமெரிக்க நாட்டுத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவரும், பிரபல இருதய வைத்திய நோய் நிபுணருமான க.சண்முகசுந்தரத்தின் மணிவிழாவும், பாராட்டு விழாவும் கடந்த ஞாயிறன்று மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தில் அதிபர் விசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்தவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவை சேனாதிராஜா எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக போர் அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்திற்கு வெளிநாட்டு உதவிகள் அதிகளவில் தேவைப்படுகின்றன.

நவீன வைத்திய வசதிகளும் மற்றும் வைத்திய உபகரணங்களும் உலக நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் எமது வன்னி போன்ற பிரதேசங்களில் அடிப்படை வைத்திய வசதிகள் இல்லாத நிலையில் மக்கள் போதிய சிகிச்சைகளைப் பெறமுடியாது இன்னல் படுகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்காவில் பணிபுரியும் இந்த மண்ணின் மைந்தர்களில் ஒருவரான டாக்டர் க.சண்முகசுந்தரம் நவீன இருதய சிகிச்சை உபகரணங்களையும் மற்றும் கருவிகளையும் எமது பிரதேச வைத்தியசாலைகளுக்கு வழங்கி உதவிபுரிய முன்வந்துள்ளமையை பாராட்டாமல் இருக்க முடியாது.

ஈழத்திலிருந்து போர்க்கால அனர்த்தங்களினால் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றவர்களில் சிலர் தமது மண்ணையும் மக்களையும் மறவாது பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். வலது கை கொடுப்பதை இடதுகை அறியாது கொடுப்பதைப் போல பல்வேறு உதவிகளை நிதியாகவும், பொருள்களாகவும் வழங்கி வருகின்றார்கள்.

இங்குள்ள தமது பகுதி ஆலயங்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் உதவிகள் செய்து வருகின்றனர். ஆனால், டாக்டர் சண்முகசுந்தரம் மனித உயிர் உடலில் இயங்குவதற்கு இன்றியமையாத உறுப்பான இருதயத்தின் செயற்பாட்டிற்கும் சிகிச்சைக்கும் மிகவும் அத்தியாவசியமான கருவிகளை - மருத்துவ சாதனங்களை - வழங்கி தனித்துவமான பேருதவியை செய்துள்ளார்.

லண்டனிலும் மற்றும் பிரிட்டன் முதலிய நாடுகளிலும் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களிலும் மருத்துவ துறையில் எமது மண்ணைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள தற்போது மருத்துவம் பயின்று கொண்டிருப்பதாக அறிகின்றேன். இவர்களில் சிலர் அந்த நாட்டு மாணவர்களை விட மருத்துவ பாடங்களில் அதிக புள்ளிகளைப்பெற்று முன்னணியில் இருந்து வருவதாகவும் அறிகின்றேன்.

இந்த தமிழ் மாணவர்களில் சிலராவது இங்கு மீண்டும் வந்து எமது பிரதேச வைத்தியசாலைகளில் பணிபுரிய முன்வரவேண்டும். இவர்கள் தாங்கள் பிறந்த மண்ணுக்கும் தொண்டாற்ற வேண்டும்- என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இங்குள்ள அரச வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்கும், வைத்திய நிபுணர்களுக்கும் நீண்டகாலமாக நிலவிவரும் பற்றாக்குறையினால் எமது மக்கள் வைத்திய சிகிச்சைகளைப் பெறமுடியாது திண்டாடி வருகின்றனர் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுகையில்:-

இருதய நோயாளி ஒருவரின் இருதயம் தற்செயலாக நின்று விட்டால் மரணந்தான் ஏற்படும். ஆனால், நின்றுவிட்ட அந்த இருதயத்தை மீண்டும் இயங்கவைப்பதற்கான ஓர் அரிய மருத்துவக்கருவியை டாக்டர் சண்முகசுந்தரம் இங்கு கொண்டுவந்து வழங்கியுள்ளமையானது இங்குள்ள இருதய நோயாளிக்கு மகிழ்ச்சிதரும் விடயமாகும். தாம் பிறந்த மண்ணிற்கு இவரைப்போன்றவர்கள் செய்யும் உதவிகள மிகவும் பெறுமதி மிக்கவை. ஏனையவர்களுக்கும் முன்மாதிரியானவையாக உள்ளன. - என்றார்.

டாக்டர் சண்முகசுந்தரம் தமது பதிலுரையில் போரினால் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாகியுள்ள ஈழத்தமிழ் மக்களின் துயர் துடைப்பதற்கு எம்போன்ற புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் மேலும் பல உதவிகளை செய்வதற்கு காத்திருக்கின்றனர். எமது உதவிகள் தொடரும் - என்றார்.

(எ-135)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு தாருங்கள்

## கோரிக்கை விடுத்து சமாசம் பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,மே2

யாழ்.மாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ.சங்கங்களுக்கு இதுவரை ஏற்பட்ட சுமார் 150 கோடி ரூபா இழப்புக்களுக்கான நஷ்டஈடு அந்தந்த சங்கங்களுக்கு உடன் வழங்கப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட விவசாய, நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரதமருக்கு மகஜர் ஒன்றையும் சமாசம் அனுப்பிவைத்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோனிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

அதில் எட்டுக் கோரிக்கைகள் அடங்கியுள்ளன. மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றிவரும் எமது அங்கத்துவ ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களின் பாதிப்புகள், இழப்புகள் தொடர்பாக குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இச்சமாசத்திற்கு உள்ளது என்பதால் பின்வரும் விடயங்களை தங்களின் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

★ யாழ்.மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்கு இதுவரை சுமார் 150 கோடி ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆதலால் இவ்விழப்புகளுக்கான நஷ்டஈடு உடன் வழங்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 5000 இற்கும் மேற்பட்ட ப.நோ.கூ. சங்க ஊழியர்கள் கடமைபுரிகின்றார்கள். இவர்களுக்கு பெரும்பாலும் சம்பள அதிகரிப்போ அல்லது மேலதிக கொடுப்பனவுகளோ இல்லை. அதே வேளை, இவர்களது சொத்துடைமைகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படவில்லை.

★ அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அபாயப்படிகளுமில்லை. குறைந்த சம்பளத்திற்கு பணிபுரியும் இவர்களது நிலை கவலைக்கிடமாகவுள்ளது. ஆதலால், சம்பள உயர்ச்சி, அபாயப்படி, நஷ்டஈடு என்பன இப்பணியாளர்களுக்கு கிடைக்கச் செய்யவேண்டும்.

★ தமது சொந்த எல்லைப் பரப்பிற்குள் தலைமை அலுவலகங்களை, கிளைகளை, திறந்து செயற்பட முடியாதவாறு. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் சில ப.நோ.கூ. சங்கங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி ப.நோ.கூ. சங்கங்களை சிறப்பாக செயற்பட அனுமதிக்க வேண்டும்.

★ திறந்த பொருளாதார கொள்கைகள் காரணமாக தனியார் துறையுடன போட்டி போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், தொழிற்படு மூலதனம் இன்றி ப.நோ.கூ. சங்கங்கள் இருப்பதால் இலகு கடன்களை வங்கிகள் மூலம் ஏற்படுத்தி தரவேண்டும்.

★ வடபகுதி விவசாய உற்பத்திப் பொருள்களிற்கான சந்தை வாய்ப்பை தென்பகுதிகளில் ஏற்படுத்தித் தர வேண்டும்.

★ ப.நோ.கூ. சங்கங்கள் புதிய கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ள நிதி ஆதாரங்களை பெற்றுத்தர வேண்டும்.

★ ப.நோ.கூ. சங்கங்கள் தமக்கான நிவாரணப் பொருள்களை சமாசத்தினூடாகக் கொள்வனவு செய்து விநியோகிக்கும் உரிமை தரப்பட வேண்டும்.

★ அரசு - விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டவை அனைத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இவை நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இந்து மாநாட்டை முன்னிட்டு பாடசாலைகளிடையில் போட்டி

இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டி பாடசாலைகள் தோறும் பல்வேறு நிகழ்வுகளும் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இன்று தொடக்கம் 10ஆம் திகதி வரை மாநாடு நடைபெறும் காலங்களில் எமது சமய கலாசார சிறப்புகளை வெளிக்கொண்டு வரும் வகையில ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் கூட்டுப்பங்களிப்பு அவசியம் என வலிகாமம் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்துள்ளார்.

சமய அறிவு சார்ந்த பேச்சுக்கள, சிறப்பு ஒன்று கூடல் என்பன பாடசாலைகளில் இடம்பெறவேண்டும். மாநாட்டை வெளிப்படுத்தக் கூடிய பதாதைகள், கொடிகள், மகர தோரணங்கள், போட்டி அலங்காரங்கள் என்பன பாடசாலைகளிலும் அதன் சுற்றாடல்களிலும் இடம்பெறவேண்டும்.

மாநாடு நடைபெறும் காலங்களில் மாணவர்கள் இந்து சமய வாழ்க்கை பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் போன்றவற்றை நடத்தவேண்டும். பாகு பெறும் பாடசாலைக்கு ரூபா 50 ஆயிரம் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் - கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(எ-152)

# காரைநகரில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே2

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், வணிகநிலையங்கள் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட நிலையங்களின் உறுப்பினர்களையும், கிராம அலுவலர்களையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம் பசிவம் கேட்டுள்ளார்.

(எ)

# ஆதிக்குடிகள்.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரசரும் தங்களுடைய தேவாரப் பதிகங்களிலே இராவணனுக்குப் பெரு முக்கியத்துவம் வழங்கியுள்ளனர். சிவசின்னமான திருநீற்றின் சிறப்புகளை வரிசைப்படுத்தும் சம்பந்தர், "இராவணன் மேலது நீறு" என்று கூறும்போது, மானிடப்பிறவி எடுத்தவர் எவருமே இவ்வாறு உயர்த்திக் கூறப்படவில்லை என்பது உற்றுக் கவனிக்கப்பட வேண்டும்.

சைவசமய குரவர்களுள் நான்காமவரான மாணிக்கவாசகர் சிவபெருமான மண்டோதரிக்கு அருள் செய்தமையைப் பாடியுள்ளார். இராவணன் தேவியான மண்டோதரி தேவதச்சன் மயனின் புதல்வியெனப்படுகிறாள். மாதோட்டமே மண்டோதரியின் சொந்த இடம என்றொரு கருத்து நிலவுகிறது.

மகாதுவட்டா என்பவன் சிவபிரானை வழிபட்ட இடமே மாதோட்டமாக மருவியதென்ற கருத்து சிலராலே முன்வைக்கப்படுகிறது. கம்மாளர்களுடைய குடியேற்ற நகராக மாதோட்டம் விளங்கியதென்ற கருத்தினை முதலியார் இராசநாயகம் முன்வைத்துள்ளார். நாகர்களுள் ஒரு பிரிவினரே இந்தக் கம்மாளர் என்று அவர் கருதுகிறார். நாகர்களும் ஒரு காலத்திலே சிவ வழிபாட்டுக்காரராக இருந்துள்ளனர்.

வங்காளத்திலே சிவ வழிபாட்டோடு குமார வழிபாடும் ஒரு காலத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியது. குமாரவழிபாடு தமிழகத்து முருக வழிபாட்டோடு இணைந்து நிற்பது. வேடர்கள் இலங்கையில் முருக வழிபாட்டை "குமர"க்கடவுளுக்கே நிகழ்த்துகின்றனர். கதிர்காமத்திலிருந்து முல்லைத்தீவு வரை, "குமார" வழிபாட்டுச சான்றுகள் காணப்படுகின்றன. கிழக்கிலங்கையிலுள்ள படைக்கோவில்கள் பல வேடராலேயே தொடக்கி வைக்கப்பட்டவையாக கூறப்படுகின்றன.

### சிவபூமி

இலங்கையிலுள்ள ஆதிப் பிராமிச் சாசனங்கள், மக்கள் பௌத்தத்துக்கு மதம் மாறிய நிலையிலே தோன்றியவை. அச்சாசனங்களிலும் பெரும்பாலானவை பௌத்த குருமாரின் பெயர்களையும் அக்குருமாருக்கான குகைகளை ஏற்படுத்தியவரின் பெயர்களையும் கூறுகின்றன. பௌத்தம் பரவுவதற்கு முன்பு, மக்களிடையே வழங்கிய ஆள்பெயர்கள் அற்றுப் போகாத நிலை அது. "சிவா" என்ற பெயர் இலங்கை முழுவதும் பயின்று காணப்படுகின்றது. பௌத்தம் இலங்கைக்கு வரமுன்பு இலங்கை சிவபூமியாக விளங்கியிருக்க வேண்டும்.

இலங்கையெங்கும் சிவா என்ற பெயர் பயின்று காணப்பட்டபோதும், மிகவும் அதிகமாகப் பயின்று காணப்பட்ட பிரதேசம் இலங்கையின் தென் கீழ் திசையாகும். அம்பாந்தோட்டை மாவட்டத்திலே கதிர்காமத்தைச் சுற்றியுள்ள மகாகமப்பற்றிலேயே "சிவா", "குமார" முதலிய பெயர்கள் செறிந்து காணப்படுகின்றன. தென்கீழ் இலங்கையிலுள்ள திருக்கோவிலுக்கு எதிரிலே கடலுக்குள் இராவணன் கோட்டை இருந்து அழிந்ததாக வரும் செவி வழிச்செய்தி இவ்விடம் நினைவு கூரத்தக்கது.

இலங்கையின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டமும் இராவணனோடு தொடர்பு படுத்தப்படுகின்றது. கோணமலைக் குன்றை வாளால் வெட்டியவனெனவும் கன்னியா வெந்நீர் ஊற்றுக்களை அமைத்தவன் எனவும் கோணேஸ்வரத்தை வழிபட்டவன் எனவும் இராவணன் கூறப்படுகிறான்.

திருகோணமலை முதல் திருக்கோவில் வரை இயக்கர் பூர்வகுடிகளாக வாழ்ந்த தென்கீழ் திசையிலே கிழக்குப் பகுதியில் அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில எனப் பெயர் பெற்ற மட்டக்களப்புப் பிரதேசத்திலே பிரசித்தி பெற்ற சிவன கோவிலிலே சிவன் கோவில் வழிபாடும் வேடர்களாலேயே தொடக்கி வைக்கப்பட்டதாக வித்துவான் வி.சீ. கந்தையா கூறுவார்.

இராவணன் முதலியோர் புலஸ்திய முனிவர் பரம்பரையிலே வந்தவர் என இராமாயணம் கூறும். சைவ சமயத்தவரான சோழப் பெருமன்னர் இலங்கையைக் கைப்பற்றிய போது இராவணனை நினைவு கூரும் வகையிலே புலஸ்திய நகர் என்ற புதிய தலைநகரை அமைத்தனர். அதுவே பொலநறுவை என்று மருவியது.

நன்றி: அருள்ஒளி

# காலத்துக்கு ஏற்ற துறையில் காலடி பதித்து வெற்றிபெறுவதே இலக்கு!

## அரலிய அதிபர் வீரசூரிய கம்பியூட்டர் துறையிலும் ஈடுபாடு



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் ஜே.ரீ.வீரசூரியவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 29ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ஜே.ரீ.வீரசூரிய.

மோட்டார் சைக்கிள் இருக்கைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்யும் தொழிலை ஆரம்பித்தார். இன்று வர்த்தகத் துறையில் கொடிகட்டிப் பறக்கும் அரலிய இன்டர்நெஷனல், அரலிய கம்பியூட்டர் இன்டர்நெஷனல், அரலிய மார்க்கெட்டிங் லிமிட்டெட் இன்டர்நெஷனல் ஆகிய கம்பனிகளின் அதிபராக இருக்கிறார் ஜே.ரீ.வீரசூரிய.

வர்த்தகத் துறையில் தாம் முன்னேறிய விதம் பற்றி அவர் விளக்குகிறார்.

காலத்துக்கு ஏற்ற துறையில் காலடி பதித்து வெற்றி பெறுவது இவரது இயல்பாகும். அவ்வாறுதான் இவர் கம்பியூட்டர் வியாபாரத்திலும் ஈடுபட்டு வெற்றிகளைக் குவித்தார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் ஜே.ரீ.வீரசூரியவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* புனித ஜோன்ஸ் பாடசாலையில் கல்வி பயின்று இன்று வர்த்தக உலகில் கால் பதித்துள்ள நீங்கள் வர்த்தகத் துறையில் யாரை உங்கள் முன்னோடியாகக் கொண்டீர்கள்?

*பதில்:* உண்மையிலேயே தேசபந்து கருஜயசூரியவே எமது கம்பனியின் நிர்வாக முகாமையாளராக இருந்தார். இவரது நடையுடை பாவனை அவர் மற்றவர்களுடன உரையாடும் விதம், நிர்வாகத் திறமை என்பன என்னைப் பெரிதும் கவர்ந்தன. அவர் அவற்றை எனக்குப் போதிக்காவிட்டாலும் நான் அவரை முன் உதாரணமாகக் கொண்டேன்.

*கேள்வி:* வர்த்தகர்கள் என்ற ரீதியில் தாம் நேர்மை தவறாமை, ஒழுக்கம் ஆகியவற்றை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் அல்லவா?

*பதில்:* நிச்சயமாக நாம் நமக்குக கீழ் தொழில் புரியும் ஊழியர்களுககு முன் உதாரணமாக நடந்துகொள்வது அவசியம்.

*கேள்வி:* வர்த்தகத் துறையில் நீங்கள் சாதிக்க நினைப்பது என்ன?

*பதில்:* வெளிநாட்டுக் கம்பனிகளை இலங்கையில் உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் பலனில்லை. நாமே நமது வர்த்தகத்தை நெறிப்படுத்தி எமது பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலைக்கு உயரவேண்டும். எமது நாட்டில் எவரும் தனது பலத்தை, பதவியை நிலையாக வைத்துக்கொள்வதில் ஆர்வங்காட்டுகிறார்கள்.

ஆனால், இவர்கள் நாட்டின் அபிவிருத்தி குறித்து கவலைப்படுவதில்லை. நாட்டின் தொழில் அபிவிருத்திக்கு நாட்டை ஆளும் அரசு பத்தாண்டு திட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டும். தாம் ஆட்சியிலிருக்கும் ஐந்து ஆண்டுகளுக்குத் திட்டங்களை வகுப்பதால் பலனில்லை. பத்தாண்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதும் இரண்டு ஆண்டுகள் திட்டத்தை கண்காணிக்கவேண்டும். தொழிற்சாலைகள் மூலம் பலருக்குத் தொழில் கிடைக்கின்றது. இதன் மூலம் ஒரு குடும்பம் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

*கேள்வி:* உலகமயப்படுத்தல் குறித்து உங்கள் கருத்து என்ன?

*பதில்:* நாம் ஒரு சிறிய நாட்டவர். மாறிவரும் காலத்திற்கேற்ப நாமும் மாறவேண்டும். நாம் நமது பொருளாதார நிலைக்கு ஏற்ப மாற்றம் பெற வேண்டியது அவசியமாகும்.

*கேள்வி:* உங்கள் வர்த்தகத்துக்கு வங்கிக்கடன் பெறுதல் மற்றும் உங்கள் வியாபாரத்துறையில் ஏற்பட்டுள்ள போட்டிகள் தொடர்பில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை?

*பதில்:* கடன் பெறுவதில் சிக்கல் இல்லை. உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதால் வெளிநாட்டு உற்பத்திகளுடன் போட்டியிட முடியாத நிலை ஏற்படும்.

*கேள்வி:* எமது நாட்டின் படைப்புகளுக்கு எமது மக்கள் அளிக்கும் வரவேற்பு எப்படி இருககின்றது. எமது உற்பத்திகளைக் கொள்வனவு செய்து ஊக்குவிக்கவேண்டும் என்ற எண்ணம் எமது மக்களிடம் இருக்கின்றதா?

*பதில்:* புதிய படைப்புகள் மக்கள் மத்தியில் வரவேற்புப் பெறுகின்றன. 1970களில் தாச முதலாளி புடைவை உற்பத்தியில் சிறந்து விளங்கினார். இவரது உற்பத்திகளை மக்கள் விரும்பி கொள்வனவு செய்தனர். எனவே சிறந்த தயாரிப்புகளுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கின்றது என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை

- இவ்வாறு கூறினார் ஜே.ரீ.வீரசூரிய.


## எமது இதயங்கனிந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்



உயர்திரு.

**திருநாவுக்கரசு இராசநாயகம்**

அவர்கள்

(கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலரும்)

பூநகரி மண் ஈன்றெடுத்த
கிளிநொச்சி மாவட்ட மண்ணின் மைந்தன்

**உயர்திரு.தி.இராசநாயகம் அவர்களின்**

இன்றைய 02-05-2003 பிறந்தநாளை நாங்களும் நினைவுகூர்ந்து எமது இதயங்கனிந்த பிறந்தநாள் வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

இருபத்திரண்டு வயதில் அரசசேவையில் சேர்ந்து திட்டமிடல் இலாகாவல் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சேவையாற்றியதோடு, 1996-1999வரை கிளிநொச்சி அரச அதிபராக அளப்பரிய சேவையாற்றி, கொழும்பு மாவட்ட பிராந்திய திட்டமிடல் பணிப்பாளராக கடமைபுரிந்த காலத்தில் கிளிநொச்சிமாவட்ட சிந்தனைகளோடு உதவிகள் புரிந்த பெருந்தகையே! நீங்கள் மீண்டும் போரினால் சிதைந்துபோன கிளிநொச்சி மாவட்டத்தைக் கட்டியெழுப்ப மீண்டும் அரச அதிபராகப் பதவியேற்று நேரம் காலம் பாராது சேவையாற்றும் தங்களிற்கு இன்றைய பிறந்தநாளில் குலதெய்வமான உருத்திரபுரீசுவரப் பெருமானையும் நாகதம்பிரானையும் பிரார்த்தித்து நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மக்களுக்கு தொடர்ந்து சேவைசெய்ய பிரார்த்திக்கின்றோம்.

*சங்கத்தானை,*
*சாவகச்சேரி (தெற்கு).*
*750, சந்தையடி, வட்டக்கச்சி,*
*கிளிநொச்சி.* (C/27627)

*அன்புடன் வாழ்த்தும்:*
எஸ்.எஸ்.இளங்கோ,
எஸ்.எஸ்.இளங்குமரன்,
எஸ்.எஸ்.நளாயினி (ஆசிரியை).



## அதிபர் வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

யா/நவாலி ம.வி., யா/அராலி சரஸ்வதி ம.வி. ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை 19-05-2003ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம்.

(C/27643)



## பாசத்துடன் நினைக்கின்றோம் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 10 - 1917



உதிர்வு 13 - 05 - 2002

**சுப்பிரமணியம் கோபாலசாமி**

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா ஓவசியர், வல்வெட்டித்துறை)

திதி: 02-05-2003 வெள்ளிக்கிழமை பிரதமை திதி

எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
எம் மனதை விட்டகலாத எம் அன்புத் தெய்வத்தின்
நினைவலைகள் என்றென்றும் எம்முடனே நிலைத்திருக்கும்!

அவரது ஆன்மா சாந்தியடைய
நாம் அனைவரும் என்றும் பிரார்த்திப்போம்.

பிரிவால் துயருறும்:
திருமதி தேவகுஞ்சரம் கோபாலசாமி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,உற்றார்,உறவினர்கள்.

*ஏ.ஜி.ஏ. ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.*

(17421)



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 19-03-2003 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தின் குலவிளக்கான

**திருமதி கணேஸ்வரன் மங்கையர்க்கரசி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் மதியபோசன நிகழ்வும் இன்று (02-05-2003) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வன்னியசிங்கம் வீதி,*
*இருபாலை றோட்,*
*கோண்டாவில் கிழக்கு.* (17402)

இ.நாகரத்தினம் (நாகராசா),
இ.குவேந்திரநாதன் (ராசா)
(சகோதரர்கள்).



## நியூ சயன்ஸ் அக்கடமி

நெல்லியடி

**2005**

கணித, உயிரியல் பிரிவு
சகல பாடங்களும்
கலை, வர்த்தகப் பிரிவு
சகல பாடங்களும்

**புதிய பிரிவு ஆரம்பம்**





## இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ
மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி.

### ஆசிய கிறாண்ட் பிறிக்ஸ் போட்டிகள்:

# சார்ஸை எதிர்கொள்ள இலங்கை தயாராகிறது

ஆசிய கிறாண்ட் பிறிக்ஸ் மெய வன்மைப் போட்டிகளை நடத்துவதன் மூலம் இலங்கை எதிர்நோக்கக்கூடிய சார்ஸ் நோய் அச்சுறுத்தலைத் தடுப பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படும் என இப்போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆசிய கண்டத்தைச் சேர்ந்த 25 நாடுகள் இப்போட்டிகளில் பங்குபற்ற வுள்ளன. இந்நிலையில் தென்கிழக் காசிய நாடுகள் பலவற்றில் சார்ஸ் எனும் உயிர்கொல்லி நோய் பரவி யுள்ளது.

'இந்நாடுகளைச் சேர்ந்த போட்டியா ளர்கள் இலங்கைக்கு வரும் போது இலங்கையும் சார்ஸ் அச்சுறுத்த லுக்கு உள்ளாகலாம் அல்லவா?' என்று செய்தியாளர் மாநாடொன்றில் வினவப்பட்டது.

இது தொடர்பாக இலங்கையின் தேசிய ஒலிம்பிக்குழுவின் தலைவ ரும் விமானநிலைய மற்றும் விமானப போக்குவரத்து அதிகாரசபையின் தலைவருமான ஹேமசிறி பெர் னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில்-

"பண்டாரநாயக்கா விமான நிலை யம் இச்சவாலை எதிர்கொள்ளத் தயா ராகிவருகிறது.

"சார்ஸ் நோயாளிகளை இனம் காண்பது எப்படி என்பது குறித்து விமானநிலைய பணியாளர்கள் அனை வருக்கும் விளக்கப்பட்டுள்ளது.

"அதிக உடல் உஷ்ணத்தை இனங் காண்பதற்குரிய விசேட ஸ்கேன் கருவி யொன்றை நாம் கொள்வனவு செய்ய வுள்ளோம். இருவாரங்களுக்குள் அது எமக்குக் கிடைத்துவிடும்" - என்றார்.

'இலங்கை மெய்வன்மைச் சங்கத் தின் தலைவர் சுனில் ஜயவீர கருத் துத் தெரிவிக்கையில்:-

'இப்போட்டிகளில் பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும் சார்ஸ் நோய் இல்லை என்பதை உறுதிப்படுத்தி ஆசிய மெய்வன்மைச் சங்கம் சான்றி தழ் வழங்கும் என எமக்கு உறுதி யளித்துள்ளது.

'இங்குவரும் ஒவ்வொரு போட்டி யாளரையும் சோதிப்பதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விடயத்தில் ஆசிய மெய்வன்மைச் சங்கம் முழுப்பொறுப்பேற்கும். அத னால் இது தொடர்பாக கவலையடை யத் தேவையில்லை.

'இப்போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை சுகாதார அமைச்சிடமும் அனுமதி பெற்றுள்ளோம். முழுமை யான ஆதரவைத் தருவதாக சுகா தார அமைச்சும் உறுதியளித்துள் ளது' - என்றார்.

(எ)

# இந்து மாநாட்டை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் விசேட நிகழ்வு

## இன்று பிரதேச செயலகத்தில் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,மே2

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச இந்து மாநாட்டு ஒழுங் கமைப்புக்குழு ஏற்பாடு செய்துள்ள விசேட நிகழ்வு இன்று காலை 9 மணிமுதல் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடை பெறவுள்ளது.

உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் நந்திக் கொடி, இந்துமாநாட்டுக் கொடி ஏற்று தல் என்பன இடம்பெற்று, தொடர்ந்து ஆசியுரை, விசேட பொங்கல், சமயச் சொற்பொழிவு என்பன இடம்பெறும்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள், அரச,அரச சார் பற்ற நிறுவனங்கள், கூ.சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாண வர்கள், பொதுமக்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர்.

(எ)


## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் செல்லப்பிள்ளையார் கோயில் நிர்வாகசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (04.05.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் இ.சதா சிவம் தலைமையில் ஆரம்பமாகும்.

எனவே, ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள், திருவிழா உபயகாரர் கள், அடியார்கள், நலன்விரும்பிகள் மற்றும் முக்கியமாக ஆலய வயல் செய்பவர்கள் யாவரும் தவறாது சமுகமளித்து கடந்தகால அனர்த்தங் களால் அழிவுக்குள்ளான ஆலய மண்டபங்களை மற்றும் கோவில் பிரதான வேலைகளை எப்படிச் செய்து முடிப்பது என்று தீர்மானிப் பதற்காக உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ.சதாசிவம்
தலைவர்.
(17438)
வ.மகாலிங்கம்
செயலாளர்.


# இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகிகள் தெரிவு ஜூன் 6 இல்

இலங்கை கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையின் நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இதற்கான உத்தரவுகளை இளை ஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண் டோ நேற்று முன்தினம் வழங்கினார்.

சுமார் 4 வருடங்களின் பின்னர் இத்தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இத் தேர்தல் நடைபெற்றது.

தலைவர் பதவிக்கான தேர்த லில் திலங்க சுமதிபால, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மாமனா ரான கிளிஃபாட் ரத்வத்தையைத் தோற்கடித்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் தேர்தல்கள் நடை பெறவிருந்த நிலையில் அப்போ தைய விளையாட்டுத்துறை அமைச் சர் லக்ஷ்மன் கிரியெல்ல கிரிக்கெட் சபையைக் கலைத்தார். தேர்தல் களையும் ஒத்திவைத்தார்.

அப்போதிருந்து விளையாட்டுத் துறை அமைச்சினால் நியமிக்கப்படும இடைக்கால நிர்வாகக் குழுவினரே கிரிக்கெட் சபை நடவடிக்கைகளுக் குப் பொறுப்பாகவுள்ளனர். தற்போது ஹேமக அமரசூரிய இடைக்கால நிர்வாகக் குழுவின் தலைவராக விளங்குகிறார்.

இந்நிலையில் புதிய தேர்தல்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி இலங்கை விளையாட்டு விஞ்ஞானப் பாடசாலைக் கட்டடத்தில் நடைபெறும என இலங்கை விளையாட்டுத்துறைப பணிப்பாளர் நாயகம் மில்டன் அமர சிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய விளை யாட்டுச் சம்மேளனங்களில் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே ஆகக்கூடுத லான நிதியைக் கொண்டுள்ளது என் பது குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால, இலங்கை அணியின் முன்னாள் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க ஆகியோர் தலை வர் பதவிக்குப் போட்டியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)


## வடபிராந்திய உப்பள ஊழியர் சேவை நலச்சங்கம்

## விசேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் 04.05.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் விசேட பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

மாதாந்த ஊழியர்களின் சம்பள விடயமாகக் கலந்துரையாட வேண்டியுள்ளதால் மாதாந்த ஊழியர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்திற்கு சமுகம்கொடுக்கும்படி ,வேண்டப்படுகின்றீர்கள்.

*இல.70, அச்சுக்கூட ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(17437)
தலைவர்.


# சிரேஷ்ட குத்துச்சண்டை போட்டிகள் அடுத்த வாரம்

சிரேஷ்ட ஆண், பெண்பயிலுநர் களுக்கான குத்துச்சண்டை போட்டி கள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்ப மாகி 11 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடை பெறவுள்ளன. தினமும் மாலை 5.30 மணிக்கு இப்போட்டிகள் ஆரம்பமா கவுள்ளன.

17வயதிற்கும் 34வயதிற்கும் இடைப்பட்ட ஆண்,பெண் குத்துச் சண்டை பயிலுநர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இப்போட்டிகளில் பங்குபற்றுவதற் கான விண்ணப்ப முடிவு திகதி மே 5ஆம் திகதி ஆகும்.

பங்குபற்ற விரும்புவோர் விண்ணப் பங்களை பிரிகேடியர் ஜகத் ஜயசூரிய, அமெச்சூர் குத்துச்சண்டை சங்க செயலாளர், 53/2, தேவாலய வீதி, களுபோவில, தெஹிவளை. எனும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் கற்பகம்

கொட்டப்புலம், பாலாவோடை வீதி, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வெள்ளவத்தையில் வசித்தவருமான திருமதி சுப்பிரமணியம் கற்பகம் நேற்று (01.05.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் துரைச்சாமி (இளைப்பாறிய ஆசிரியர்), சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்ற உலகேஸ்வரி ஆகியோரின அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சவுந்தரத்தின் சிறிய தாயாரும் இரத்தினம், சிவஞானவதி, சபாநாதன், ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 04.05.2003 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20 1/3, புகையிரத வீதி,*
*வெள்ளவத்தை.*
T.P. : 01-582473
(17436)
தகவல்:
சு.துரைச்சாமி
(மகன்)

### விசுவநாதர் பராக்கிரமசிங்கம்

*(முன்னாள் ஆளணி முகாமையாளர், இ.போ.ச.)*

மாதகலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதர் பராக்கிரமசிங்கம் நேற்று முன்தினம் (30.04.2003) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் - சிதம்பரம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் சிற்றம்பலம் - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் லிங்கேஸ் வரியின் அன்புக் கணவரும் கேமவண்ணன் (சுவிஸ்), சதீஸ்வரன் (கூட்டுறவுப் பரிசோதகர், முல்லைத்தீவு), உசாவதனா ஆகியோரின் அன்புத் தந்தை யும் காலஞ்சென்ற தெய்வானை, தங்கம், வள்ளியம்மை (கனடா) ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், திருஞானம், பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனரும் யசோவின் அன்பு மாமனாரும் சாராவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2003) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வில்வளை,*
*மாதகல்.*
(17434)
தகவல்:
ப.சதீஸ்வரன் (மகன்).


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்





### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2603263 இருந்து
2620126 வரை
சீட்டிழுப்பு இல. 1396
திகதி 30.04.2003

## வெற்றி எண்கள்

**28 32 35 53 55**

போனஸ் எண் **42**

## ஜக்பொட் பரிசு

## ரூபா 4,256,450/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 4,256,450/- | 4,256,450/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 94 | 10,000/- | 940,000/- |
| 3 | 5,503 | 500/- | 2,751,500/- |
| 2 | 88,308 | 20/- | 1,766,160/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 28ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 108,867 | 10/- | 1,088,670/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,902,780/-

### இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

## ரூபா 1,500,000/-

தொடர் இல. 3603110க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மே 03ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2615530-2-83
2617371-1-33
2615755-5-01
2612026-7-70
2604155-4-73

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



கொழும்பில் இன்று ஆரம்பமாகும் இந்து மாநாட்டையொட்டி வவுனியா, மன்னார், திருமலை ஆகிய இடங்களில் இருந்து தலைநகருக்கு வந்துள்ள அலங்கார ஊர்திகளையே படங்களில் காண்கிறீர்கள்.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகை தந்துள்ள ராஜஸ்தான் பிரம்மகுமாரி உலக சமய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் இராஜஜோகினி, இலங்கை இராஜயோக நிலையத்தின் மேலதிக தேசிய இணைப்பாளர் பீ.கே.கனேஸ் மற்றும் இணைப்பாளர்களான பீ.கே.செல்வரத்தினம், பீ.கே.குகன் ஆகியோர் இந்துவிவகார அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் கலந்துரையாடுவதை இறுதியாக உள்ள படத்தில் காணலாம். (ஐ)

# எமது மக்கள் சுதந்திரமாகத் தொழில் புரிய அந்நிய சக்திகள் இங்கிருந்து அகல வேண்டும்

## மேதின உரையில் தமிழினி உரை

யாழ்ப்பாணம்,மே2

எமது மக்கள் சுதந்திரமாகத் தமது தொழில்களைச் செய்து வாழவேண்டுமேயானால் எமது தாயக பூமியை ஆக்கிரமித்து நிற்கின்ற ஆக்கிரமிப்பாளர்கள் இங்கிருந்து அகலவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி.

நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேதின எழுச்சிக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகையே புதிய வடிவமாக மாற்றியமைக்கக்கூடிய வல்லமை பொருந்திய பெரும் சக்தியாக திகழ்பவர்கள் தொழிலாளர்களே.

இந்தத் தொழிலாளர்களின் உழைப்பு, இரத்தம், கண்ணீர் எல்லாம் இணைந்தே இன்றைய நவீன உலகம் வடிவம் பெற்றுள்ளது.

எமது தமிழீழ தாயகத்திலே எமது மக்கள் மீது இனவாத சக்திகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய யுத்தத்தினால் தொழிற்சாலைகள் பல அழிக்கப்பட்டன. எமது மக்களின் சுயதொழில் மையங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. மக்களின் பொருளாதார வளம் சிதைக்கப்பட்டது.

இனவாத சக்திகளினால் திணிக்கப்பட்ட யுத்தத்தினால் எமது மக்கள் வறியவர்களாக்கப்பட்டனர். தமது சொந்தக் கடலில் நிம்மதியாக - சுதந்திரமாக - தொழில் செய்து வாழ்ந்தவர்களமீது கடல் தடைச் சட்டங்கள் போடப்பட்டன.

பெறுமதியான கடல்வளத்தைக் கொண்ட எமது தேசத்திலே எமது கடலில் இறங்கி தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. தொழிலுக்கு சென்ற மீனவர்கள் சடலங்களாக கரை ஒதுங்கி நின்ற பரிதாப நிலை, அவர்களது தொழில் உபகரணங்கள் பறிக்கப்பட்ட அவலம் இவை யாவும் எமது தாயகத்திலே நடந்தன.

தமது சொந்த நிலத்திலே விவசாயம் செய்து வாழ்ந்த எம்மக்கள், அங்கிருந்து துரத்தப்பட்டார்கள். அவர்களின் வயல் நிலங்கள்யாவும் காடுகள், பற்றைகள் மண்டிய வனாந்தரமாக மாறின. மக்கள் ஏதிலிகளாக இடம்பெயர்ந்து அலைந்துதிரிந்தார்கள். எமது தாயகம், தேசியம் எனபன சிதைக்கப்பட்டு மக்கள் தமது சுயமுகவரியை இழந்தவர்களாக வாழ்ந்தனர்.

எமது கல்விமான்களின் அறிவு சுரண்டப்பட்டது. எமது உயர்கல்வி நிறுவனங்கள் அறிவாளிகளை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற தொழிற்சாலைகளாக மாற்றம் பெற்றுள்ளன.

இவையெல்லாம் இனவாத சக்திகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளின் விளைவாய் ஏற்பட்டனவாகும். எமது மக்களின் அர்ப்பணிப்பு, தியாகம், என்பவற்றால் இன்று எமக்கென்று ஒரு பலமான படை இருக்கின்றது.

இதுவரை எமது மக்களை ஏமாற்றிய சக்திகளினால் இனிமேல் ஏமாற்ற முடியாது. ஏனெனில், இப்பொழுது எமது மக்களின் முன்னால் ஒரு பெரும் படை இருக்கின்றது.

சர்வதேச ரீதியாக எமது பலம் மக்களின் இரத்தத்தாலும் வியர்வையாலும் உயர்ந்து நிற்கின்றது.

இந்தப் பலம் இருக்கும் வரை எம்மை எவரும் ஏமாற்றமுடியாது என்றார் தமிழினி.(ஐ4-5-8-9-10-30-86-)

# மேதின விழாவில் ஒலித்த கோஷங்களிலிருந்து...

யாழ்ப்பாணம்,மே2

நேற்று யாழ்நகரில் நடைபெற்ற கூட்டு மேதின பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் எழுப்பப்பட்ட கோஷங்களில் சில வருமாறு:-

★சந்திரிகா அம்மையாரே! போர் வெறியை நிறுத்து!

★புரிந்துணர்வு உடன்பாட்டை நடைமுறைப்படுத்து!

★உயர் பாதுகாப்பு வலயம் தமிழ் மண்ணின் ஆக்கிரமிப்பு!

★எமது பாதுகாப்பு, எமது கௌரவம், விடுதலைப் புலிகளின் பலத்தில்!

★தொழிற்சாலைகளை மூடுவது வடக்கின் புனரமைப்பா?

★சிறிலங்கா அரசே! சமாதானம் பேசி காலம் கடத்துவது போர் தயாரிப்பிற்கா?

★ போரிலே குளிர்காய்ந்தவர்களுக்கு சமாதானம் சுடுகிறதா!

★தொழிலாளர் வர்க்கத்தை நடுத் தெருவில் விடாதே!

★மொழியும் மண்ணும் விழிபென்றால் தலைவன் எங்கள் உயிரன்றோ!

★உழைக்கும் கரங்களே உலகை ஆளும்!

★அந்நிய சக்திகளே சமாதானத்தை குழப்பாதீர்!

★வேண்டும்! நிரந்தர சமாதான மிக்க எதிர்காலம்!

★வேண்டாம்! இன்னோர் யுத்த அழிவு

★தமிழ் மக்களை ஏமாற்றாதீர் வரலாறு துரோகிகளை ஏமாற்றும்

★எங்களுக்கு வேண்டும் எமக்கென்றொரு நாடு!

(ஐ-6)

# இந்து மாநாடு சிறப்புற சமயத் தலைவர்கள் ஆசி

கொழும்பில் இன்று ஆரம்பமாகும் 2 ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டி சமயத்தலைவர்கள் வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

அவற்றில் சில வருமாறு:-

*காஞ்சி காமகோடி*

"யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு. ஆறுமுகநாவலர் இந்நாட்டிலிருந்து வளர்த்த சமயம், இன்று இங்கு வேரூன்றியுள்ளது.

அரசின் இந்துசமய விவகார அமைச்சின் சார்பில் நடைபெறவுள்ள இந்த உலக இந்துமாநாடு நன்கு நடைபெறவும், பங்குபெறும் அறிஞர்களின் நற்கருத்துக்களால் இந்துசமயமும தர்மமும் வளர்ச்சி பெறவும் உலகில் சமாதானம் நிலவவும் பரிபூரணமாக வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்.

*கைலை மாமுனிவர்*

"2ஆவது உலக இந்து மாநாட்டைக் கூட்டுவது அறிந்து மிகவும் மகிழ்கின்றோம். பல ஆயிரமாய்ப் பார்வையாளரும் பேராளர்களும் பங்கு கொள்ளவும் நோக்கரிய நோக்காய் உள்ள சமயக் கோட்பாடுகள் பல கோணச் சிந்தனையில் பலவாய்ப் பரிணமித்துச் செவிநுகர் கனிகளாய்ப் பலருக்கும் பயன்படவும், மாநாட்டு மலர் பற்பல அரிய நுட்பச் செய்திகள் அடங்கிய அழகு மலராய் அறிவு மலராய், அருள் மலராய் மலரவும் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

*நல்லை ஆதீன முதல்வர்*

"இந்து கலாசார அமைச்சினால் 2ஆவது உலக இந்து மாநாடு இவ்வருடம் கொண்டாடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

இன்று இந்து மத மக்கள் அனுபவிக்கும் பல இன்னல்களை நீக்கி வைக்கும் மாநாடாக இந்த 2ஆவது உலக இந்து மாநாடு அமைய வேணடும என்பதே எலலோருடைய விருப்பமும் ஆகும்.

இந்நாட்டில், மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தும் நீங்கி சாந்தியும் சமாதானமும் மலர அனைத்து இந்து மக்களும் பிரார்த்திப்போமாக.

*சுவாமி ஆத்மகணானந்தா*

"2ஆவது உலக இந்து மாநாடு இந்நாட்டின் இந்து மக்களது உள்ளத்தில் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

இம்மாநாட்டை முன்னின்று நடத்தும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கும் அவரது அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும் அனைத்து தொண்டர் குழுவினருக்கும் எமது இனிய நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். மாநாடு சிறப்புடன் நடந்தேற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிய பிரார்த்திக்கின்றோம். (ஐ)

## நாதசுர கலைஞர்கள் கொழும்பு பயணமாகினர்

கொழும்பில் இன்று ஆரம்பமாகும் 2ஆவது இந்து மாநாட்டில் இசை விருந்தளிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து நாதசுர - தவில் கலைஞர்கள் நேற்றுப் புறப்பட்டுள்ளனர்.

அகில இலங்கை இசைவேளாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புறப்பட்ட கலைஞர் குழுவினர் இன்றும் நாளையும் கொழும்பில் இசைவிருந்தளிப்பார்கள். (எ-3)


விபேட்டி
மங்கள் நிலையம் M.G.R நடிக்க
இரகசிய பொலீஸ் 115
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
T.P.: 070 212223
திங்கட்கிழமை முதல் வசீகரா

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா
இரசு
10.30, 2.30, 6.30
CROUCHING TIGER HIDDEN DRAGON
இன்றும் இரவு 9.30 இந்த மட்டும்.

நிறஞ்சனாஸ்
விஜய், ரம்பா, ரகுவரன் நடிக்க
என்றென்றும் காதல்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
China Strike Force

லக்ஷ்மி சினிமா
இன்று முதல்
ரஜனி சௌந்தர்யா ரம்பா ரகுவரன் நடிக்க
அருணாச்சலம்
தினசரி: 11.00, 3.00, 7.00

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசன்னா, கவிதா மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
(f)பைவ் ஸ்டார்
தினசரி காட்சிகள் :
11.00, 3.00, 7.00 (பி.நே.)

ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் நீர்த்தாங்கி, கிணறு திறப்பு விழாவும்
யா/கெருடாவில் இ.த.க.பாடசாலை
தொண்டைமானாறு
அமரர் செல்லத்துரை பாலேந்திரா
அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் மேற்படி பாடசாலையில் அன்னாரின் ஞாபகார்த்த நீர்த்தாங்கி, கிணறு திறப்புவிழாவும் நாளை (03.05.2003) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்களின் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.
இவ்விழாவில்,
திரு. பாலேந்திரா செல்வேந்திரா அவர்களும்
திரு. குமாரசாமி பொன்னேசகுமாரன் அவர்களும்
பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றனர்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யா/கெருடாவில் இ.த.க. பாடசாலை,
தொண்டைமானாறு. - ஏற்பாட்டாளர்கள்.
(C/27656)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
விசேட பூஜை
இந்துசமய பண்பாடு கலாசார அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலக இந்து மாநாடு வெகு சிறப்புடன் நடைபெறவேண்டி அம்பாளுக்கு இன்று (02.05.2003) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு விசேட பூஜை நடைபெறவுள்ளதால் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (17440) - தேவஸ்தானம்.

# யாழ்.கோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திற்கும், மீன்சந்தைக்கும், விளையாட்டரங்குக்கும், பொதுமக்கள் கூடும் ஏனைய வேறு பல இடங்களுக்கும் மிகவும் நெருக்கமானதாகும்.

யாழ்குடாநாட்டில் உள்ளூர இடம பெயர்ந்த குடும்பங்கள், துருப்புக்களின பெரும் செறிவு காரணமாக தாங்கள முன்னர் வாழ்ந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியேறவும் வழமை நிலையின் கீழ் நாளாந்த அலுவல்களை ஆரம்பிக்கவும் முடியாதிருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இராணுவம் நிலை கொண்டிருப்பதைக் குறைப்பதே போர்நிறுத்த உடன்படிக்கையின் முக்கிய குறிக்கோளாகும்.

எனவே, உங்களின் யோசனை போர்நிறுத்த உடன்படிக்கைக்கு ஏற்புடையதல்ல. வழமைநிலையை ஏற்படுத்துவது என்ற எதிர்பார்ப்புக்கும் முரணானதாகும்.

முன்னைய யோசனைக்குப் பொது மக்கள் பெரும் எதிர்ப்பு தெரிவித்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும். உங்களின் புதிய யோசனையும் அவ்வாறான பொது மககள் எதிர்ப்பை ஏற்படுத்தும் என்று நாம் அஞ்சுகிறோம். இவ்விவகாரம் பொதுமக்கள் மனதில் ஏமாற்ற உணர்வை உருவாக்கியிருக்கிறது என்பதையும் நம்பிக்கையை கட்டியெழுப்பும்குறிக்கோளுக்கு எதிரானதாக அமையும் என்பதையும் நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

அதனால், போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிய யோசனையை மீள்பரிசீலனை செய்யுமாறு நாங்கள் உங்களைக் கோருகின்றோம். மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்ற துரிதநடவடிக்கை எடுக்கப்படுவது பாராட்டுக்குரியதாகும்

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப பட்டிருக்கிறது. (ஐ)



தமிழ்த் தேசிய இனத்தின் கூட்டு மேநாள் ஊர்திப் பேரணியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஊர்திகளின் நிறுவனங்களுக்கும் நேற்று இரவு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தின் முடிவில் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துறையூர் கடற்றொழிலாளர், கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன முறையே முதல் மூன்று இடங்களையும் வென்றன. அவற்றின பிரதிநிதிகளுக்கு முறையே தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா, விடுதலைப்புலிகளின் யாழ்அரசியல்துறை செய்தித் தொடர்பாளர் இளையோன், புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் தங்கப்பதக்கங்களை அணிவிப்பதை படத்தில் காணலாம்.

தெரிவு செய்யப்பட்ட மேலும் 7ஊர்திகளுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வட பிராந்திய வகுப்பு தொழிலாளர் சங்கம், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வலி.கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், குருநகர் கடற்றொழிலாளர் சங்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி) ஆகிய அமைப்புக்களின் ஊர்திகளே ஆறுதல் பரிசுகளை வென்றன. (படங்கள்: ரமா)

# நூற்றுக்கணக்கான ஊர்திகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அகவணக்கத்தைத் தொடர்ந்து மேதின உரைகள் இடம்பெற்றன. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ரெலோ கட்சியின் முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எப். (சுரேஸ் அணி) செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன், யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்படப் பலர் உரையாற்றினர்.

தலைமையுரையைத் தொடர்ந்து கூட்டு மேதினப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. இதனை யாழ்பல்கலைக்கழக மாணவன் எஸ்.பிரதீபன் வாசித்தார். பிரகடனம் பொதுமக்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிகழ்வின் இறுதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஊர்திகளுக்கு தங்கப்பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இதற்கு முன்னதாக பிற்பகல் 3.45 மணியளவில் நல்லூரில், தியாகி திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் இருந்து அலங்கார ஊர்திப் பேரணி ஆரம்பமாகியது. இதில் நூற்றுக்கணக்கான ஊர்திகள் கலந்து கொண்டன. பேரணியின் முன்னே சமயத் தலைவர்களும், தமிழ்க்கட்சிகளின பிரமுகர்களும் செல்ல பின்னே தமிழீழத் தேசியத் தலைவர் வேபிரபாகரனின் உருவப் படத்தைத் தாங்கிய ஊர்தி சென்றது.

தொடர்ந்து பொதுமக்களும் அவர்களின் பின்னே ஊர்திகளும் சென்றன. பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டு வீதியூடாக ஊர்திப்பேரணி மாலை 4.45 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தைச் சென்றடைந்ததும் அங்கு கூட்டம் ஆரம்பமாகின.

பேரணியில் கலந்துகொண்ட மக்கள் போருக்கு எதிரான சுலோக அட்டைகளை வைத்திருந்தனர். கோஷங்களையும் எழுப்பினர். பேரணியில் காணப்பட்ட ஊர்திகள் அனைத்தும் கருத்துக்கு விருந்தாகவும் கண்ணுக்கு கவர்ச்சியாகவும் அமைந்திருந்தன. பேரணி சென்ற வீதிகள் தோறும் பெரும் எண்ணிக்கையான மக்கள் நின்று அவற்றைக் கண்டு ரசித்தனர். அத்துடன் பொலீஸாரும் வீதிகள் தோறும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். மக்களை ஒழுங்குபடுத்தவும், முதலுதவிகளை மேற்கொள்ளவும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், மக்கள் நலன்புரிச் சங்கப படையணிகளும் அவற்றின் தொண்டர்களும் ஈடுபட்டிருந்தனர்.

பேரணி மற்றும் பொதுக்கூட்டம் என்பன நடைபெற்றபோது லேசாக மழையும் பெய்துகொண்டிருந்தது. எனினும் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

மழை பெய்த காரணத்தால் இறுதி நிகழ்வாக நடைபெறவிருந்த இசை நிகழ்ச்சி ரத்துச்செய்யப்பட்டது.
(ஐ-10-9-8-5-30-86)

# 2ஆவது உலக இந்து மாநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வும் மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்கள்.

மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி வரை நடைபெறும் மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகளும் வெவ்வேறு இடங்களில் நடைபெறும்.

இன்றைய ஆரம்ப விழாவில் தபால திணைக்களம் நினைவுத் தபால் முத்திரை (பெறுமதி ரூபா 4/50) வெளியிட்டு வைக்கிறது. மாநாட்டு மலரும் வெளியிடப்படுகிறது.

யாழ்ப்பாணம்,மன்னார்,வவுனியா திருமலை,மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து அலங்கார ஊர்திகள் கொழும்புக்கு வந்துள்ளன.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நேபாள கலாசார, சுற்றுலா, விமான சேவைகள் அமைச்சர் குபேர் பிரசாத் சர்மா, இந்தியா ஆந்திர மாநில அறநிலையத்துறை அமைச்சர் ஸ்ரீ தந்து சிவராம ராஜ, அவரது துணைவியார் திருமதி அருணபிரபா சிவராம ராஜ, நேபாள கலாசார, சுற்றுலா, விமான சேவைகள் அமைச்சு செயலாளர் தம்பர் தத் அவஸ்திய ஆகியோர் கொழும்பு வந்துள்ளனர்.

இநதிய நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல தென்னிந்திய நடிகருமான சரத்குமார் அவரது துணைவியார் திருமதி ராதிகா சரத்குமார், முன்னாள் இந்திய உயர் நீதிமன்ற நீதியரசர் மோகன், அவரது துணைவியார் திருமதி திலகவதி மோகன், சிங்கப்பூர் இந்து அறநிலையத் துறைச்சபைத் தலைவர் வி.ஆர்.நாதன், நேபாளத்தில் இயங்கும் உலக இந்துப் பேரவையின் தலைவர் ஜெனரல் பாரய்கேஸ்வரி சிங், ஆலோசகர் மோகன் கோபால்சேதர், பேரவையின் பிரமுகர் பிரேம் லக்ஸ்கரி ஆகியோரும் மாநாட்டிற்கு வருகை தந்திருக்கின்றனர். (ஐ-3)


புதிய A/L 2005 பிரிவு

பொருளியற் கல்லூரி யாழ்நகர் | பொருளியற் கல்லூரி இணுவில்

கலை, வர்த்தகம்

| | யாழ்நகர் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடகம் | சுகந்தன் | சுதன் |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| கிறீஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| ஆங்கிலம் | நிசாந்தன் | நிசாந்தன் |
| மே 03 இல் ஆரம்பம் | 10.00 a.m. | 3.00 p.m. |

ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும் (17390)

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 9மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (17408)

இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு
அம்பிகா அம்மா



மீண்டும் யாழ்.
புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.

- திருமணத் தடங்கலா?
- காதல் தோல்வியா?
- தீராத வியாதியா?
- உயர் கல்வியில் தடங்கலா?
- கடன் தொல்லையா?
- தொழில் முன்னேற்றத்தடங்கலா?
- புதிய தொழில் தொடங்க வேண்டுமா?
- குழந்தைப் பாக்கியம் இல்லையா?
- செய்வினை, பில்லி சூனியம்.

இது போன்ற எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம். உடனே அம்மாவைச் சந்தியுங்கள். நன்மை அடையுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:-

அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில் (17407)

COMPUTER COURSES

NEW BATCHES - 03

BATCH I
25.05.2003

முழுவிபரங்களும்
உள்ளே பக்கம் 6இல் (C/27654)

- IIS

BARATHY
சித்தன்கேணி

அனுமதி பெற்று விட்டீர்களா?
ஏன் தாமதம்?
இம்முறை மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், எண்ணிக்கை விரைவில் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

A/L 2005

கலை. வர்த்தகப் பிரிவுகள்
யாழ்நகர் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | - மகேந்திரன் |
| வணிகக்கல்வி | - பசில் |
| கணக்கீடு | - முகுந்தன் |
| அளவையியல் | - R.P.சர்மா |
| தமிழ் | - பாலா |
| இந்து நாகரிகம் | - சுரேஸ் |
| இந்து சமயம் | - தரன் |
| புவியியல் | - குமரன் |
| நாடக அரங்கியல் | - J.சுதன் |
| அரசியல் | - றஜீவன் |
| வரலாறு | - M.சுதன் |
| கிறிஸ்தவம் | - வசந்தன் |
| ஆங்கிலம் | - பிரபல ஆசிரியர் |

(17393)


# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் ஸ்ரீவரதலிங்கம்

(பிரதேசசபை, உரும்பிராய்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ஸ்ரீ வரதலிங்கம் நேற்று (01.05.2003) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவகுமாரியின் அன்புக் கணவரும் தர்சிகா, தெய்விகா, தனுசிகா ஆகியோரின் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் செல்லப்பாக்கியத்தின் மகனும் ஸ்ரீதரலிங்கம் (கனடா), ஸ்ரீகாலிங்கம் (ஜேர்மனி), ஸ்ரீஜெயலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் வைத்திலிங்கம் (பிரபல வர்த்தகர் - சுன்னாகம்) அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*ஐயனார் கோவிலடி,*
*சுன்னாகம்.* (17442)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## D.R.ஜோசப்

*(ஓய்வுபெற்ற ஊழியர், மின்சாரசபை)*

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், 67, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட D.R.ஜோசப் 27.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இன்னாசி ஜோசப் - மேரி மார்கிறற் தம்பதிகளின் அன்பு மகனும் லில்லி மேரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற விக்ரர் (யாழ்.ஜெயம்) மற்றும் எலிசபெத் தம்பதிகளின் அன்பு மருமகனும் பாலேந்திரா, றொமோல்ட், டினேஸ்ரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லீனி, மியூரில் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜொனத்தான், ஜெனிபர், ஜெரமி, ஜஸ்மினா, லொறண்டா ஆகியோரின் அன்புப் பேரனாரும் றூபஸ், காலஞ்சென்றவர்களான மங்களராசா, கிரகரி மற்றும் போல் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.05.2003) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித மரியாள் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*67, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (17435)

தகவல்:
J.லில்லிமேரி (மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.